விலை ரூபா: 8.00
*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 28 புதன்கிழமை (11.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 143

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

# ஹர்த்தாலால் வட - கிழக்கு நேற்று முற்றாக ஸ்தம்பிதம்



## யாழ். குடாநாடு சோபையிழந்தது; ஆங்காங்கே பொதுமக்கள் - படைத்தரப்பிடையே முறுகல்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு சந்திவெளியில் பொதுமக்களும் மாணவர்களும் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று வடக்குக் கிழக்கு எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

**இதனால் வடக்குக்கிழக்கில் அனைத்துச் செயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பித்தது.**

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் அரச, அரச சார்பற்ற நிறுனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பன இயங்கவில்லை.

உள்ளூர், வெளியூர் போக்குவரத்துக்களும் இடம பெறவில்லை. நகரங்கள் அனைத்தும் பொதுமக்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

### யாழ்ப்பாணம்

ஹர்த்தால் காரணமாக யாழ்ப்பாணம் நேற்று சோபையிழந்து காணப்பட்டது. அரச திணைக்களங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

யாழ். நகரம் மக்களின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. இதேவேளை நேற்றைய ஹர்த்தாலின்போது மருதனார்மடம், (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலருடன் எரிக் சொல்ஹெய்ம் இன்று பேச்சு

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று இந்திய உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன் முதற்கட்டமாக இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரணை இன்று சந்திக்கவுள்ளார். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளமை தொடர்பாகவே இக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை முடிபுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் கொலையைக் கண்டித்து வவுனியாவில் நேற்று மௌனப் பேரணி

(வவுனியா)

கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து நேற்று வவுனியாவில் மௌனப் பேரணியொன்று நடைபெற்றது.

வன்னி ஊடகவியலாளர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்பேரணியானது, வவுனியா ரம்பைக்குளம் அந்தோனியார் தேவாலய முன்றலில் ஆரம்பமாகி வவுனியா நகரூடாக மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. இறுதியில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த மௌனப் பேரணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் நாளை கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் நேற்றுமுன்தினம் பொதுமக்களும், மாணவர்களும் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நாளை காலை 10 மணிக்கு கண்டன ஊர்வலம் ஒன்று இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகும் கண்டனப்பேரணியானது கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தைச் சென்றடைந்து அங்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இக்கண்டன ஊர்வலத்தில் பொதுமக்களையும், மாணவர்களையும் ஒன்றுகூடுமாறு யாழ்.மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச)

## ஐ.நா. மனிதஉரிமை ஆலோசகர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

## உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி - நிதியமைச்சர்

# தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் ஆலோசகர் ரோமுன் கோபன் நேற்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

சுமார் ஒருமணிநேரம் வரை நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார். (ச-4)

# பொருளாதாரத் தடையை கண்டித்து திருமலையில் இன்று ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் ஈச்சிலம்பற்றுப் பகுதிகள் மீது இராணுவம் விதித்துள்ள பொருளாதாரத்தடையை கண்டித்து இன்று மாபெரும் கண்டனப்பேரணி நடைபெறவுள்ளது. இன்று காலை மகிந்தபுர இராணுவ முகாம் முன்பாக இக்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. ஈச்சிலம்பற்று மக்கள் இந்தக் கண்டனப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். திருகோணமலையின் சம்பூர், ஈச்சிலம்பற்றுப் பகுதிகள் மீது படையினர் கடந்தமாத இறுதிப்பகுதி முதல் பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதனை நீக்கக்கோரி மக்கள் கட்டைபறிச்சான் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது வடக்கு கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தடைநீக்கப்படுமென வாக்களித்திருந்தார். ஆனால் தடைதற்போதும் தொடர்கிறது. இந்நிலையில் மகிந்தபுர இராணுவ முகாம் முன்பாக போராட்டம் இன்று நடத்தப்படவுள்ளது. (ச)

# ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி - நிதியமைச்சர்

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டினை எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாநாட்டின் ஆரம்ப வைபவம் 16 ஆம் திகதி கண்டி தென்னங்கும்பரயில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதனையடுத்து கண்டி மஹாவடி றிச் விருந்தகத்தில் மாநாடு முற்பகல் 11.30 இற்கு ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை மாநாடு 17 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு முடிவடையவிருப்பதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் இவ்வாரம் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-4)

# பொதுக்கட்டமைப்பு குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி 16 ஆம் திகதி இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 14 ஆம் திகதி இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார். உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஆலோசனை பெறுவதற்காகவே இந்திய அரசின் அழைப்பின்பேரிலேயே அவர் அங்கு செல்லவுள்ளார்.

இந்தியா செல்லும் ஜனாதிபதி அங்கு பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னர் இந்தியாவின் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...



யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



## யாழ். பல்கலை மருத்துவப்பீடத்திற்கு
# சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அனுமதி குறித்து
# பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தீர்மானிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்திற்கு சிங்கள, முஸ்லிம் மாணவர்களை சேர்ப்பது தொடர்பான கொள்கையளவிலான தீர்மானமொன்றை எடுக்கவிருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஆணைக்குழு மட்டத்தில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித்மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி கல்வி அமைச்சுக்கு பொறுப்பான ஜனாதிபதியுடன் மானிய ஆணைக்குகுழு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு தெரிவாகும் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அங்கு செல்லவிருப்பம் தெரிவிக்காததைஅடுத்தே இத்தகைய சிக்கல் நிலை தோன்றியது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 100 மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுதலைவர் 2004ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து அங்கு தெரிவான 26 பேர் தொடர்பிலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி கற்க விரும்பாததால் அவர்களைஸ்ரீஜயவர்த்தனபுர பேராதனை, களனி, ருகுனு ஆகிய பல்கலைக் கழகங்களில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பல்கலைக் கழகங்களில் குறிப்பிட்ட அளவிலாள மாணவர்கள் உள்ளதால் இவர்களை சேர்த்துக்கொள்ள பீடாதிபதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

## யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்களின் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர்தொழில் நுடப நிறுவனத்திலிருந்து 2002, 2003 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்பாக யாழ்ப்பாண உயா தொழில்நுட்ப நிறுவனத்தில் பெறுபேற்று சான்றிதழ்கள், அடையாள அடடை சகிதம் தவறாது தொடர்பு கொள்ளுமாறு உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத் தலைவர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

சாந்தினி வேலுப்பிள்ளை (NDE-2002), கந்தையா ஞானச்சந்திரன் (HNDA-2003), கனகசபை கோடீஸ்வரன் (HNDA-2003), இராமச்சந்திரா தயாகரன் (HNDA-2003), சிவகொங்கா சிவானந்தன்(HNDA-2003), சோமசுந்தரம் யசோதரன (HNDA-2003), சோதிநாதன் முகுந்தன் (HNDA-2003) சசிகலா சின்னத்தம்பி (HNDA-2003), பத்மநாதன் ஜரேந்திரன்(HNDA-2003), சிவயோகினி சின்னத்தம்பி(HNDA-2003), சோமசுந்தரம் சுகிர்தன் (HNDA-2003), ஞான சேகரம் ரூபகரன் (HNDA-2003). (ற)

## சூரிய மின்கலம் அன்பளிப்பு

பூநகரியிலுள்ள தமிழீழ வைப்பகத்தால் கிளிநொச்சி பூநகரி ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு சூரிய மின்கலமொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக்கொடியினை பூநகரி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன் ஏற்றினார்.

சூரிய மின்கலத்தை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் இயக்கிவைத்தார். அதனைத்தொடர்ந்து கோட்டக்கல்விப் பணிப்பாளர் தமிழீழவைப்பக ஆளுகை நிதி மேலாளர், பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர், பூநகரி ம.வி.அதிபர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (து)

## அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டும்
## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு குறித்து ஐககிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த முனனர் அரசாங்கம்அதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும் என ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு குறித்து அரசாங்கத்திற்குள்ளேயே ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லை. பிரதமர் கூட இவ்விடயம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி எப்படி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி வடக்கு-கிழக்குப் பிரச்சினையை இப்போது குழப்பியடித்து வருகின்றார். நான் பதவியிலிருந்த காலத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு வடக்கு கிழக்கை மறுசீரமைக்க நிதியமொன்றையும் ஆரம்பித்தேன்.

ஆனால் அதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு அதிகாரம் கிடைப்பதாகக் குற்றம் சாட்டி அதனைரத்துச் செய்வதாக ஜனாதிபதி கூறினார்.

தற்போது அன்று நான் ஆரம்பித்த இடத்திற்கே இன்று ஜனாதிபதி வந்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். (து)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களிற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.பகல்10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களையும் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு கடிதமூலம் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா அறிவித்துள்ளார். (ற-47)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி அச் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திலிருந்து 1ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்வு வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சைக்கு அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரிய ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1ம் வகுப்பிற்குப் பதவி உயர்வு பெறும் பரீட்சைக்கு2ம் வகுப்பின் 1ஆம்தர ஆசிரியர் அல்லது/ஆசிரியை விண்ணப்பிக்கலாம் 2ம் வகுப்பின 1ம் தரசேவைக்காலத்துக்குள் பிரமாணக் குறிப்பின் விதிகளின்படி 05 புள்ளிகள் உழைத்துக் கொணடிருத்தல் வேண்டும்தொழிற் தகைமைகளைப பெற்றிருத்தல் போன்ற தகைமைகள் 2004.12.31 திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்

சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆம தரத்தைச் சேர்ந்த கல்வி முதுமாணி, முதுமாணி(கலை), கல்வித்தத்துவ முதுமாணி, விஞ் ஞானமுதுமாணி கல்விபட் டதாரிகள் இப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படும் .

பிரமாணக் குறிப்பின்படி தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பதவி உயர்வுக் காகக்கருத்திற் கொள்ளப்படுவர்.

விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி. இத்திக திக்கு முன்பு சேவையாற்றும் கல்லூரியின் அதிபர்/ வலயக்கல்விப் பணிப்பாளர் மூலம் பெலவத்தபத்தர முல்லையில் அமைந்துள்ள இலங் கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற குப் பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.( க-2)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் குறித்து
## நோர்வே தூதரக அதிகாரி நீதிமன்றில் விளக்கம்

(மன்னார்)

உயிலங்குளம் இராணுவச் சோதனைச்சாவடியில் சோதனையின் போது தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு ஜீப்வண்டிகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள 1 கோடி 89 இலட்சம் ரூபா ரொக்கப் பணம் என்பன தொடர்பாக நோர்வேத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் மன்னார் [illegible]

இந்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக நோர்வேயினால் சுமார் 20 வரையிலான வாகனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக நோர்வேத் தூதரக அதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த வாகனங்கள் முறைப்படி இலங்கை மோட்டார் பதிவுத்திணைக் களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், பதிவின்போது எந்தவித [illegible]

மானப் பணிகளுக்காக நிதி வழங்கப்பட்டமைக்கான ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதி மன்றம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அதிகாரியிடம் கேட்ட போது அவைகள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், தம்மிடம் அவ்வாறான ஆவணங்கள் எதுவும் வழங் கபபடவில்லை என பொலிஸார் நீதிமனறில் தெரிவித்ததையடுத்து விசாரணைகளை வரும் 18 ஆம் திகதிக்கு மன்னார் மாவட்ட நீதிபதி ஒத்தி வைத்துள்ளார். (ற-4)

## 238 பிரதேச செயலகங்களில்
## நிர்வாக சேவையில் வெற்றிடங்கள்

நாடளாவிய ரீதியில் 238 பிர [illegible]

கல்கள் தோன்றியிருப்பதாகத் [illegible]

## கருத்தமர்வு

வர் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் தோன்றி விளக்கமளித்துள்ளார்.

எனினும் அவற்றை விடுவிப்பதற்கு மன்னார் பொலிஸார் இணக்கம தொிவிக்கவில்லை. இது தொடர்பான புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணைகள் இன்னும் முடியவில்லை என்பதனைக் காரணம் காட்டியே பொலிஸ் தரப்பில் தாகவும், பதிவின்போது எந்தவிதமான சந்தேகங்களும் எழுப்பப்படவில்லை என்றும் இந்த வாகனங்கள் குறித்தும் இப்போது எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்கள், விசாரணைகள் என்பன தமக்கு குழப்பம் தருவதாகவும் நோர்வே அதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.

இநநிலையில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களினால் மனிதாபி.

நாடளாவிய ரீதியில் 238 பிரதேச செயலகங்கள் இலங்கை நிர்வாக சேவைமுதலாம் தரத்தைச்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளதால்அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப்பிரதேசங்களில் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் நிவாரண நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுப்பதில் பல்வேறு இடையூறுகள் எதிர்நோக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கருத்தில் கொண்டு இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர உததியோகத்தரை நியமனம் செய் வதறகாக விரைவில் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரி வித்துள்ளார்.

உரிய தகவல்களைக் கொண்டிராதஉத்தியோகத்தர்கள் பொறுப்புவாயந்த பதவிகளில் நியமிக்கப்பட்டால் செயற்பாடுகள் அனைத்திலும் பல்வேறு தாமதங்கள் ஏற்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள 328 பிரதேச செயலக்ங்களில் 90 செயலகங்களில் மட்டும் இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த போதிலும் திறைசேரியின் அனுமதிக்காக காத திருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-5)

# தொழில்வாய்ப்பு வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அடுத்த மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம்

## பிரதி நிதி அமைச்சர்

(கொழும்பு)

அடுத்த மாத இறுதிக்குள் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு நிரந்தரநியமனம் வழங்க முடியும் என பிரதியமைச்சர்ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொழில்வாய்ப்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள நடைமுறைச்சிக்கல்கள் காரணமாகவே நிரந்தர நியமனம வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட தாக அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் நியமனத்துக்குப் பட்டதாரிகளைத்தெரிவு செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கானதிகதியை தெரிவுசெய்வதில் கூட சிக்கல்கள் ஏற்பட்டது. எனினும், குறிப்பிடட பரீட்சையினை எதிர் வரும் 21 ஆம் திகதியில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட பரீட்சைகளுக்கு நாட்கள் ஒதுக்கப்பட வேண்டி இருந்ததால் இந்தப் போட்டிப் பரீட்சை தாமதமடைந்துள்ளது. எவ்வாறாயினும் இது போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் இயன்றளவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் பிரதியமைச்சர் மேலும குறிப்பிட்டார்.

இதேவேளை, அரசாங்கம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காகக் குறிப்பிட்ட கால எல்லை கடந்துள்ளதாக வேலையற்றபட்டதாரிகளின் ஒருங்கிணைக்கபபட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள் நிரந்தரநியமனங்கள் வழங்கப்படாத பட்சத்தில்அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அச்சங்கம் எச்சரிததுள்ளது.(ற-4)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் திருமறை கலா மன்றத்தின் கருத்தமர்வில் 'நல்ல சினமாவுக்கான தேவை',

எனற தலைப்பில் 'சலனசித்திரம்' அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி கருத்துரை வழங்கவுள்ளார்.

இநநிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு உரும்பிராய் புனிதமைக்கேல் ஆலயவளாகத்தின் மன்றத்தில் இணைப்பாளர் இ.விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

## திருட்டு முயற்சி

(கொழும்புத்துறை)

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த நபா ஒருவரின் வீட்டில் திருட முயன்றவர்கள், வீட்டிலுள்ளோர் விழித்துக் கொண்டதால் தப்பித்துக் கொண்டனர்.

ஆயினும்அவர்கள் திருடுவதற்காக ஈடுபடுத்தப்பட்ட 11 வயது புத்தி சுவாதீனமற்ற சிறுவன் மாட்டிக் கொண்டான்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வதியில் இடம்பெற்றது.

அகப்பட்ட சிறுவன் தனது பெயர் விபரம் எதனையும் தெரிவிக்காததை அடுத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.(க-7-51)







அன்புள்ள நீர் அகமெல்லாம் பொங்கப்பொங்க அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செய்பல அன்பர் தோன்றத் தோன்ற தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுத சுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசிதீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழி வாழி

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி
# அமுதசுரபி அன்னதான சபை
## 2005 ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது) 2005

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்தமுறையில் அன்னதானத் தொண்டினைச் செய்துவருகின்றது. இவ்வாண்டுடன் 46வது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையென கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவி செய்துவருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச் சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும்பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத்தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும் தத்தம் கடமைகளை திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவிவரும் தரும சீலர்களுக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாண்டு வைகாசி மாதம் 25ஆம் நாள் (08.06.2005) புதன்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி 17.06.2005 வெள்ளிக்கிழமை மஞ்சத்திருவிழாவும், 20.06.2005 திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 21.06.2005 செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 22.06.2005 புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 23.06.2005 வியாழக்கிழமை பூங்காவனமும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாட்களும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடியாகப் பணம்கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi Commercial கணக்கு இல. 1247985001 Peoples Park கட்டடம் Pettah என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## இங்ஙனம்
# ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை
## நயினாதீவு-2

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| த.சிவானந்தன் | கு.சாந்தலிங்கம் | கு.ஸ்ரீஸ்கந்தராசா |
| "சாஸ்தா" 133, 5ஆம் குறுக்குத்தெரு | அமுதசுரபி மண்டபம் | Makkmillan, |
| கொழும்பு 11, | நயினாதீவு - 02 | 195, Olcott Mawatha |
| தொலைபேசி 2438991, 2384757 | | Colombo - 11 |
| | | Tel: 2449565 |

(C/1368)

# இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்

# பல்வேறு அமைப்புக்களும் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்று முன்தினம் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலை யாழ். மாவட்ட அமைப்புகள் பலவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.**

**இது விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் உட்பட வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம், தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு சந்திவெளி இராணுவ முகாம் இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான பொது மகன் படுகொலையையும், பொது மக்கள், மாணவர்கள் மீதான கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தையும் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்களைக் கடந்த போதும் ஒப்பந்தத்தில் சுட்டிக்காட்டியவாறு இராணுவத்தினர் பொது மக்கள் வாழுகின்ற, நடமாடுகின்ற பகுதிகளிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். மாறாக இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்துவதிலேயே முனைப்புடன் செயற்பட்டனர்.

மேற்படி சோதனைச் சாவடிகளால் மக்களுக்கு நாளாந்தம் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள், அசௌகரியங்கள் காரணமாக இதனைப் பொறுக்கமுடியாத மக்கள் தமக்கே உரித்தான அகிம்சை வழியில் ஜனநாயக மரபில் தமது நாடாளுமன்ற மூன்று உறுப்பினர்கள் சகிதம் இராணுவச் சாவடியை அப்புறப்படுத்தும்படி போராட்டம் நடாத்திய போது ஸ்ரீலங்காப் படைகள் தமது வரலாற்று ரீதியாக அடக்குமுறையை பழிவாங்கும் நோக்குடன் தமது இன அழிப்பு நடவடிக்கையில் மிகவும் மிலேச்சத்தனமான செயற்பாட்டில் இறங்கியுள்ளது.

இதனால் போராட்டத்தில் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்ட பாமர மகன் 67 வயது நிரம்பிய குமாரசாமி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். அதேவேளை அகிம்சைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பாமர மக்கள், மாணவர்கள் உட்பட 19 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த அகிம்சை போராட்டத்தில் மக்களோடு மக்களாக் கலந்து கொண்ட மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இப்படிப்பட்ட அடக்குமுறையும் அடாவடித்தனமும், உயிர் அழிப்பும் சிங்கள தேசத்தின் போரியல் வரலாற்றில் மலிந்து போயுள்ளது. இப்படிப்பட்ட கொடூர நிகழ்வுகள் தொடருமானால் மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. என்பதை இன்றைய சம்பவம் எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன.

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா இனவாத இராணுவத்தின் படுகொலைகள், அச்சுறுத்தல்கள், அட்டூழியங்கள் தொடர்வதால் எழுந்துள்ள மிகவும் மோசமான பாரதூரமான, ஆபத்தான நிலைமைகளை சர்வதேச சமூகத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உலக போரியல் வரலாற்றில் இப்படிப்பட்ட நிகழ்வுக்கு இடமேயில்லை. இன்றாவது சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளுமென நம்புகிறோம்.

### பத்மினி சிதம்பரநாதன் (எம்.பி)

மட்டக்களப்பு சந்திவெளியில் மக்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துக் குரலெழுப்பியபோது இராணுவம் மக்களைத் தாக்கியது. ஒருவர் கொல்லப்பட்டும், 25 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

மீண்டும் ஒருமுறை தனது இனக்குரூரத்தை ஸ்ரீலங்காப்படை வெளிக்காட்டியுள்ளது. இதனை உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாடு சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் உலகத் தலைநகர்களில் வரவேற்கப்படுகிறார்கள். தமிழ்த் தேசியத்திற்கு அங்கீகாரம் படிப்படியாக வளர்ந்து வருகின்றது.

இத்தகைய பின்னணியில் சிங்கள இனவாதம் தீவிரவெறி கொண்டு செயற்பட்டு வருவது நாம் அறிந்ததே. தமிழர்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கக் கூடாது. அதாவது மனிதாபிமான உதவிகளைக் கூடக் கொடுக்கக்கூடாது என்று கூக்குரலிடும் அளவுக்கு, அந்தக் கூக்குரலை புத்தபிக்குகளே வெளிப்படுத்தும் அளவுக்கு இனவெறி தலைகால் தெரியாமல் வெளிப்படுகின்றது.

மறுபுறத்தில் சாதாரண தமிழ் மக்களையும் தமிழ்ப் பிரமுகர்களையும் கொலை செய்யும் அளவுக்கு இந்த இனவெறிக் குரூரம் வெளிப்பட்டு வருகின்றது. சர்வதேச சமூகம் இத்தகைய இனவாதப் போக்கை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகில் உலக சமாதானத்திற்கு எதிராக உள்ள இத்தகைய நச்சு இனவாத குரூரத்தை இல்லாது ஒழிக்க முழுமூச்சுடன் செயற்படுவதற்கு கரம் கோர்க்க வேண்டும்.

### வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம்

போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் காலத்தில் மக்கள் தமது எதிர்ப்பினை சாத்வீகமான முறையில் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படாதமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் கொலைவெறித் தாக்குதல் காரணமாக அப்பாவி முதியவர் ஒருவர் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயமடைந்துள்ளனர். இது படையினரின் தான்தோன்றித்தனமான ஒரு செயலாகும். போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் காலத்தில் மக்கள் தமது எதிர்ப்பினை சாத்வீகமான முறையில் தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படாதமை மனித உரிமைகளை மீறும் செயலாகவே இருக்கின்றது. இதில் பாடசாலை மாணவிகள் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் மக்கள் மீது அரசாங்கமும் படையினரும் மீண்டும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் செயலாகப் புதிய சோதனைச் சாவடி அமைக்கும் நடவடிக்கை அமைகின்றது. மக்கள் படிப்படியாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு மாறாகத் தடை முகாம்கள் ஏற்படுத்துவது எம் மக்கள் மீது மீண்டும் கெடுபிடிகளை ஏற்படுத்துவதாகவே அமையும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் இராணுவம் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாக இருந்தால், மக்கள் தனித்து இருக்கும் சந்தர்ப்பங்களில் படையினர் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை இச்சம்பவம் கோடு காட்டி நிற்கின்றது.

எதிர்காலத்தில் பொது மக்கள் மீது இது போன்ற சம்பவங்கள் ஏற்படாதவாறு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

### தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

மட்டு. சந்திவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட இராணுவ முகாமை அகற்றக் கோரி அப்பகுதி மக்களினால் நடத்தப்பட்ட ஜனநாயக வழியிலான போராட்டத்தினைத் தனது வழமையான பாணியில் அதாவது ஆயுதத்தினால் அடக்க முற்பட்ட ஆக்கிரமிப்பு வெறி கொண்ட இராணுவம் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இச்சம்பவத்தில் அப்பாவிப் பொது மகன் ஒருவன் ஸ்தலத்திலேயே இராணுவப் பசிக்கு இரையாகி விட்டார். அத்தோடு சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்ட அப்பாவிப் பொது மக்கள் பலர் படுகாயமடைந்துள்ளனர். இதில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

தமிழ் மக்களாகிய நாம் சமாதான காலத்தில் என்ன நிகழும் என எதிர்பார்த்தோமோ அதற்கு மாறாக முற்றிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகின்ற, எமது மக்களைக் கொன்றொழிக்கின்ற வேலையினையே ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமும் செய்து வருகின்றது.

இவற்றை ஜனநாயக முறையில் தட்டிக் கேட்க எம் மக்கள் முற்படுகின்ற போது ஆயுத முனையில் அரசு அடக்க முற்படுகின்றது. இராணுவம் இச் சமாதான காலத்தில் நாம் இராணுவப் பசிக்கு இரை கொடுத்த உயிர்களின் எண்ணிக்கை நீண்டு கொண்டே செல்கின்றது.

எனவே, இந்த இராணுவ அராஜகங்களுக்கு எதிராக நாம் கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய ஒரு சூழல் தோற்றம் கொண்டு விட்டது.

பத்திரிகையாளர் சிவராமின் படுகொலை நிகழ்ந்து ஒருவாரம் முடிவடைந்த நிலையில் இன்னுமொரு படுகொலை அதே மண்ணில் நிகழ்ந்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மட்டக்களப்பு சந்திவெளியில் இடம் பெற்ற ஜனநாயக போராட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்பு இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைத்ததனை எதிர்த்து, சாத்வீக முறையில் மக்கள் போராட்டத்தினை மேற்கொண்டார்கள்.

இந்த மக்களின் போராட்டத்தினை அடக்குவதற்காக, மக்களது குரல்களை நசுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட காடைத்தனமான, இராணுவத்தின் நடவடிக்கையை கண்டிக்கின்றோம்.

குறிப்பிட்ட தாக்குதலில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டும் 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயப்பட்டும் உள்ளனர். இவர்களில் குறிப்பாக 6 பேர் மாணவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இராணுவம் யுத்த நிறுத்த காலத்தில் மேற்கொண்டுவரும் காடைத்தனமான இராணுவத் தாக்குதல்களுக்கு இது புதிது அல்ல. தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் ஆயுத முனையில் அடக்கிவிட சிங்கள பேரினவாத அரசாங்கமும், அதன் இனவெறி பிடித்த இனவாதக் கட்சிகளும் முனைப்புப் பெற்று செயற்படுகின்றன.

இவ்வாறான அடக்கு முறைகள் இனியும் தொடருமாக இருந்தால் தமிழர்கள் பொறுமையை இழக்கவேண்டிய நிலை உருவாகும் என்பதை இலங்கை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துகின்றோம். (ற)

## அமைச்சர் றிஷாட்டின் முயற்சி

# இரு தசாப்த காலமாக செயலிழந்திருந்த

# புத்தளம் — மன்னார் பாதை திறக்கப்படவுள்ளது

(புத்தளம்)

புத்தளம்-மன்னார் பாதையினை பொது மக்களின் போக்குவரத்துக்காகத் திறப்பதற்கான நடவடிக்கையினை எடுப்பதன் அவசியம் குறித்து வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன், ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான பதிலை ஜனாதிபதி அளித்துள்ளார்.

மன்னார்-புத்தளம் பாதையினை மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்துவதன் மூலம், சுமார் 150 கிலோமீற்றர் தூரப் பயணத்தைக்குறைக்க முடியுமென அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அண்மையில் எடுத்துக் கூறியதையடுத்து, ஜனாதிபதி, இப் பாதையினைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராய அவசரக் கூட்டமொன்றை ஏற்படுத்துமாறு, தமது செயலாளர் ஜே.எஸ்.கருணாரட்ணவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் இக்கூட்டம் நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்தமாதம், இப்பாதையினை திறப்பதற்கான அனுமதியினை கோரி அமைச்சர் றிஷாட் பதியுதீன் பாதுகாப்புத் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இருந்த போதும், பாதுகாப்புக் காரணங்களை மேற்கோள் காட்டி, மக்கள் போக்குவரத்துக்கு இப்பாதையைத் திறப்பது சாத்தியமல்லவெனத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக , இலகு பயணத்தை மேற்கொள்ள முடியுமென அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாக இப்பாதைத் திறப்புக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தமது செயலாளரைப் பணித்துள்ளார்.

இப்பாதையினை மக்கள் பாவனைக்குத் திறப்பதன் மூலம் மறிச்சுக்கட்டி, கல்லாறு, கொண்டச்சி, சிலாபத்துறை, அரிப்பு, வங்காலை ஆகிய கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தியடைவதுடன், பல்லாயிரக்கணக்கான மக்களும் இதன் மூலம் நன்மையடைவர்.

வில்பத்து சரணாலயத்தினை ஊடறுத்துச் செல்லும் இப்பாதை 1902ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போது உருவாக்கப்பட்டது. கடந்த இரு தசாப்தகால யுத்தத்தால் இப்பாதை முழுமையாகச் செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரு-15)

# இன்று ஒரு தகவல்

## மருதுபாண்டியர்

சிவகங்கைக்கு அருகில் ஏதோ ஒரு சிறிய கிராமம்.ஒரு நாள் விடியற்காலை நேரம். ஒரு குதிரையில் அவர் வந்து கொண்டிருக்கிறார். முதல் நாள் எதிரிகளுடன் போராடி அவர்கள் கையில் சிக்காமல் அவர் தப்பி வந்திருக்கிறார்.

யார் அவர்? மருது பாண்டியர்!

பரோபகாரச் சிந்தை- சிவபக்தி புலவர்களை ஆதரிக்கும் இயல்பு- குடி மக்களைத் தாய்போல் காப்பாற்றும் தகைமை இப்படியெல்லாம் இருந்தும் கூட கடைசி காலத்தில் அவருக்கும் எதிரிகள். பல முறை பகைவர்கள் அவரைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் முடியவில்லை!

ஒரு சமயம் மருது பாண்டியர் திருக்கோஷ்டியூர் பெருமாள்கோவிலுக்கு எதிரிலுள்ள ஒரு மண்டபத்தில் தங்கிருந்தார்.

அது எதிரிகளுக்குத் தெரிந்துவிட்டது. 'ஊர் எல்லைக்குத் தன்னைப் பிடிப்பதற்குப் பகைவர்கள் வந்துவிட்டார்கள்!" என்ற செய்தி அவருக்கு எட்டியது.

உடனே மருது பாண்டியர் ஒரு குதிரைக்காரனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு அவசர அவசரமாகப் புறப்பட்டார்.அப்போது அவரது வலக் கையில் சிலந்தி உண்டாகி வேதனைகொடுத்தது. அதில் ஒரு கட்டுப் போட்டுக்கொண்டு அவர் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்.

அவ்விதம் புறப்பட்டவர்தான் மறுநாள் காலையில் அந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். ஒரு கூரைவீடு... அதன் எதிரில் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் கோலம் போட்டுக்கொண்டிருந்தார். அங்கே போய் குதிரை நின்றது. அந்த மூதாட்டி நிமிர்ந்து பார்த்தார். மருது பாண்டியரின் கம்பீரமான தோற்றம் மூதாட்டியின் மனதில் அன்பை உண்டாக்கியது. ஆதலால் அவர் யார் அப்பா நீ... உனக்கு என்ன வேண்டும்? என்று வினாவினார்.

"அம்மா எனக்கு பசியாக இருக்கிறது... தாகமாக இருக்கிறது.... ஏதாவது இருந்தால் கொடுங்கள்!" என்றார் மருதுபாண்டியர்.

"இராத்திரி தண்ணியில் போட்டுவைத்த பழைய சோறு இருக்கிறது வா போடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மூதாட்டி மருது பாண்டியரை தன் குடிசைக்குள் அழைத்துச் சென்றார்.

சொன்னது போலவே அன்பாக உபசரித்தார். அம்மா இரவு முழுவதும் நான் தூங்கவில்லை.... இங்கே மறைவாக ஏதாவது ஓர் இடம் கிடைத்தால்.....குதிரையைக் கட்டிப்போட்டுவிட்டு... தூங்கலாம் என்று பார்க்கிறேன்!" என்றார்.

"அதுதான் பெரிது.... வீட்டுக்குப் பின்னால் ஒரு கொட்டகை இருக்கிறது.... அங்கே குதிரையைக் கட்டிப்போட்டுவிட்டு படுத்துக் கொள்..... யாரும் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள் குதிரைக்கும் தீனி போடுகிறேன்" என்றார் மூதாட்டி.

மருதுபாண்டியருக்கு இராஜபோஜனத்தை விட அந்தப் பழைய சோறும், பண்பாடும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அந்த மூதாட்டி கொடுத்த ஓலைப் பாயை வாங்கிக்கொண்டு அவர் குடிசையின் பின் பக்கம் சென்றார்.

குதிரையைக் கட்டினார். பாயை விரித்துப் படுத்துக்கொண்டார். பக்கத்திலேயே குதிரைக்காரனும் படுத்துக்கொண்டான். இருவரும் அயர்ந்து தூங்கினார்கள். கண் விழித்தபோது சூரியன் உச்சியில் இருந்தான். அந்த கூரை வீட்டில் சாப்பிட்ட சாப்பாடும் தூங்கின தூக்கமும் மருது பாண்டியரின் உடம்பிலும் மனதிலும் ஒரு புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. நன்றியுணர்வோடு அவர் வயதான மூதாட்டியைப் பார்த்தார். இவர்கள் காட்டிய அன்புக்கு இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது என நினைத்தார்.

"அம்மா... உங்கள் வீட்டில் ஓர் எழுத்தாணி இருந்தால் கொண்டு வாருங்கள்" என்று கேட்டார். "என் பிள்ளைகள் ஒரு விசேஷத்திற்காக வெளியூர் போயிருக்கிறார்கள் அப்பா... அதெல்லாம் எங்கே வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லையே என்றார் மூதாட்டி.

"சரி... பரவாயில்லை!" என்று கூறிய மருதுபாண்டியர் குதிரைக்காரனைக் கூப்பிட்டு, "இந்த வீட்டின் கூரையில் இருந்து ஒரு பனை ஓலையும் பக்கத்து வேலியிலிருந்து ஒரு முள்ளையும் எடுத்துக் கொண்டு வா!" என்றார்.

குதிரைக்காரன் அவர் சொன்னது போல் செய்தான். "இந்தக் கிராமத்தை இந்த மூதாட்டிக்கே கொடுக்கிறேன். இனி இந்த கிராமம் முழுவதும் இந்த மூதாட்டிக்குச் சொந்தமானது" என்று எழுதி கையெழுத்திட்டார். முள்ளால் எழுதிய அந்த தர்மசாசனத்தை மருது பாண்டியர் மூதாட்டியிடம் கொடுத்தார். பிறகு, "அம்மா சிவகங்கை சமஷ்தான அதிகாரிகளிடம் இதை நீங்கள் கொண்டுபோய் கொடுத்தால் உங்களுக்கு ஏதாவது அனுகூலம் உண்டாகும்!" என்று சொல்லிவிட்டு குதிரை மீது ஏறி சென்று விட்டார். "வெளியூர் சென்ற பிள்ளைகள் திரும்பி வந்ததும்.... இதை எடுத்துக்கொண்டு போய் சமஸ்தானத்தில் காட்டலாம் என்று மூதாட்டி நினைத்தார்.

ஆனால் அதற்குள் "பகைவர்கள் சமஸ்தானத்தைக் கைப் பற்றி விட்டார்கள்" என்ற செய்தி வந்தது. மருதுபாண்டியரை.... அதன் பிறகு பகைவர்கள் பிடித்து சிறையில் அடைத்துவிட்டார்கள். நீண்டகாலம் கழித்து அவருடைய கடைசிக்காலத்தில் ..... பகைவரின் அதிகாரிகள் அவரிடம், "உங்களுடைய கடைசி விருப்பம் என்னவென்று சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். அப்போது மருதுபாண்டியர் என்ன சொன்னார் தெரியுமா? "நான் யார் யாருக்கு எந்தெந்தக் கிராமத்தை எழுதிக் கொடுத்திருக்கிறேனோ அதெல்லாம் அவர்அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும்! இது தான் என் பிரார்த்தனை! இதைத்தவிர எனக்கு வேறு எந்த விருப்பமுமில்லை" என்று தெரிவித்தார். இதைக் கேட்டதும் அவரது விரோதிகளே ஒருமாதிரியாக ஆகிவிட்டார்கள். அவருடைய நன்றியுணர்வுக்கு மரியாதை கொடுத்து அவருடைய இறுதி விருப்பத்தை நிறைவேற்றினார்கள்.

"மருதுபாண்டியர் கொடுத்த பொருள்கள் எல்லாம் உரியவர்களுக்கு வழங்கப்படுகிறது"! என்று கேள்விப்பட்ட அந்த மூதாட்டி தன்னிடமிருந்த ஓலையை கொடுத்தனுப்பிப் பார்த்தாள். அந்தக் கிராமம் அவருக்குக் கிடைத்தது. அப்படிக்கிடைத்த கிராமம் தான் பிறகு "பழஞ்சோற்று குருநாதனேந்தல்" என்ற பெயரைப் பெற்றது. தன் வீட்டில் பழைய சோறு சாப்பிட்டது மருதுபாண்டியர் என்ற விஷயமே அந்த மூதாட்டிக்கு அதன் பிறகு தான் தெரியவந்ததாம். கையில் கட்டுப்போட்டிருந்த நிலையிலும்... கூரையில் இருந்து எடுத்த ஓலையில் முள்ளினால் முக மலர்ச்சியோடு மருதுபாண்டியர் எழுதிய காட்சி மூதாட்டியின் நினைவில் நிழலாடியது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மின்சாரசபையின் பிரச்சினைக்குத் தீர்வுகாணாவிடின் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும்

(கொழும்பு)

தற்போதைய மின்சாரசபைப் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படாவிடில் நாட்டின் பொருளாதாரத்தில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரசபை தற்போது 90 பில்லியன் ரூபா நஷ்டத்தில் இயங்கிவருகிறது. அனுராதபுரத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி உரையாற்றிய போது நாட்டிற்கு என்ன நடைபெறுகிறது என யோசிக்காமல் வெளியிட்ட கருத்துக்கும் எடுக்கப்படும் சகல சீர்திருத்தங்களுக்கும் பல அரசியற்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

மின்சாரசபைக்கு மக்கள் வங்கியே கடன் வழங்கியிருந்தது. தற்போது இதனை தாங்கமுடியாமல் வங்கி கூட பாதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம் கிடைத் ததன் பின் அரசாங்கங்களின் ஊழல்களினால் இத்தகைய கடன்தொகை ஏற்பட்டுள்ளது.

தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து போன்ற எம்மிலும் பார்க்க பொருளாதார ஸ்திரத்தன்மை கூடிய நாடுகள் இத்தகைய நடவடிக்கைகளாலேயே ஆபத்தை எதிநோக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த 11 மாதங்களிலேயே 60 பில்லியனாக இருந்த கடன்தொகை 90 பில்லியனாக மாற்றமடைந்தது. நாளுக்கு நாள் மின்சாரசபை 40 மில்லியனை இழக்கிறது. எனவே இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரு-6)

## நாட்டு மக்கள் வீட்டுக்குப் போகுமாறு கூறினால் ஆட்சியை விட்டு விலகுவோம்

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

அரசாங்கம் 1994ஆம் ஆண்டு உறுதியளித்தபடி தனியார் மயமாக்கல் திட்டம் எதனையும் மேற்கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பத்தாயிரம் குளம் புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் அனுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை மின்சாரசபை நாளுக்கு நாள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அத்துடன் கடந்த 11 மாத காலப் பகுதியில் மின்சார சபையை மறுசீரமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளது. எனவே முன்னர் மின்சார சபைக்கு 60 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.

தற்போது அது 90 மில்லியன்களாக மாறியுள்ளது. அதனால் நட்டம் ஏற்படாத வகையிலேயே மின்சார சபையை மறுசீரமைக்கப் போவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டை முன்னேற்றும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்துக் கட்சிகளும் உறுதியுடன் செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

நாட்டு மக்கள் எப்பொழுது வீட்டிற்குப் போகச் சொல்கின்றார்களோ அன்று ஜனநாயக வழியில் ஆட்சியை விட்டு விலகுவதே தமது கொள்கை என்றும் தெரிவித்த ஜனாதிபதி நாட்டில் விலையேற்றங்கள் ஏற்பட்டாலும் நாட்டின் பொருளாதாரம் பலமாகவுள்ளதாகத் தெரிவித்தார். (க-9)

## அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம.வி. பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) வகுப்பு 2.11 (பயிற்றப்பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும்)ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து மாத்திரமே ஆசிரிய சேவையிலுள்ள விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

✧ ✧ ✧

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட தாவடி இந்துக் கல்லூரி த.க. பாடசாலை,காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை, அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை ஆகியவற்றில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.1, வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1,வகுப்பு 2.1 வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும், காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை மற்றும் அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை ஆகிய இரு பாடசாலைக்கும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.11, வகுப்பு111ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1, வகுப்பு 2.11 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ற)

## போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமொன்று வகுக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இதற்கென பொலிஸ் தலைமையகத்திலிருந்து விசேட பொலிஸ் குழுக்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தெரிவித்திருக்கிறார்.

விபத்துக்கள் அதிகமாக இடம்பெறும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 55 மோட்டார் சைக்கிள்களுடன் விசேட பொலிஸ் குழுவினர் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் குறித்து 118, மற்றும் 119 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யலாமெனவும்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (க-7-9)

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்விக் கண்காட்சியொன்று எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளில் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கல்விக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களது கல்வி சார் ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

12 ஆம் திகதி நடைபெறவுள்ள கல்விக் கண்காட்சியின் ஆரம்பவைபவத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-19)

## சமுர்த்தி உதவிபெறுவோரை ஊக்குவிக்கத் திட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி உதவி பெறுவோரை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளது.

இதன் முதற் கட்டமாக 12 பிரதேச செயலகப் பிரிவுகளை இலக்காக வைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் சமுர்த்தி அதிகாரிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணைப்பு அதிகாரிகளாக ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இத் திட்டத்தின் மூலம் இந்தத் துறையில் அறிவை வழங்குதல், உடன் உதவிகளை வழங்குதல், உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான இலகு வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (க-9)

## பல்கலை அனுமதியை இழந்த மாணவருக்கு மாற்றுத்திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியை இழக்கும் 86 சதவீத மாணவர்களுக்கு அதற்கான மாற்றுத் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு உதவப் போவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும், மாணவர் சங்கங்களுடனும், தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்திவருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

பெரும்பாலான மாணவர்களுக்கு உயர்கல்வி நிறுவனங்களினூடாக பட்டம் வழங்கும் சந்தர்ப்பத்தை வழங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சில தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமை அர்த்த மற்றது என்றும்,

இந்த மாணவர்களின் எதிர்காலத்தை முன்னேற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு சகல தரப்பினர்களினதும் ஒத்துழைப்பு அவசியமென்று பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் மேலும் தெரிவித்தார். (க-7-9)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:07 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடங்கள்

❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

> கிழக்கு வானம் மெல்லிய ஒளிக்கீற்றுக்களால் பிரகாசமானது. ஆதவன் வரவை எதிர்பார்த்தது போல பறவைகள் ஒலி எழுப்ப... வண்டுகள் ரீங்காரமிட... ஆனந்தமயமான அந்த வேளை ஆனந்தனின் மனதில்... ஆனந்தத்தைக் கொடுத்தது.

(01) மேலே உள்ள பந்திமூலம் விபரிக்கப்படும் காட்சி எது?
1)கடற்கரைக் காட்சி 2)காலைக்காட்சி 3)மாலைக்காட்சி

(02) இப்பந்தியில் "ஆதவன்" எனும் சொல் யாரைக் குறிக்கின்றது?
1)சூரியன் 2)சந்திரன் 3)நண்பன்

(03) "சந்தோசம்" எனும் சொல்லின் ஒத்த கருத்துடைய சொல் ஒன்று பந்தியில் உண்டு. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
1)இன்பம் 2)மகிழ்ச்சி 3)ஆனந்தம்

(04) மேற்கு என்பதன் எதிர்ச்சொல் பந்தியில் உண்டு. அதனைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1)வடக்கு 2)கிழக்கு 3)தெற்கு

☼ சரியான விடைக்குரிய இலக்கத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(05) கீழ்வரும் உருக்களில் $\frac{2}{10}$ பங்கு நிழல்படுத்தப்பட்டுள்ள பகுதி.




(06) கீழ்வரும் வடிவங்களுள் ஈர்க்குக்குச்சிகளைக் கொண்டு அமைக்கமுடியாத வடிவம்.



(07) புகைவண்டி ஒன்றின் சில்லுகள்
1)இரும்பாலானவை 2)மரத்தாலானவை
3)இறப்பராலானவை 4)சீமெந்தாலானவை


(08) பாடசாலை ஒன்றின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பவர்
1)ஆசிரியர் 2)அதிபர் 3)மாணவர் 4)பெற்றோர்

(09) நீரிலும் நிலத்திலும் வாழத்தக்க உயிரினம்.



(10) மனித உடலில். எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் அங்கம்
1)கண் 2)கால் 3)இதயம் 4)கை

☼ கீழ்வரும் உருக்களை அடிப்படையாகக் கொணடு 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடை தருக.




(11) மிகவும குறைந்தளவு கன உருக்களைக் கொண்ட உரு எது?


..................................................................

(12) உரு IV இல் உள்ள குற்றிகளின் மேற்பரப்புக்கு மை (வர்ணம்) பூசின் எத்தனை குற்றிகளுக்கு மேற்பரப்பு எதிலும் வர்ணம் பூசப்படாது இருக்கும்?


..................................................................

☼ கீழ்வரும் கோலங்களை அவதானித்து வெற்றிடத்தினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

(13)




(14)




(15)




☼ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(16)



அருகேயுள்ள பாத்திரத்தில் நீரால் நிரப்பப்பட்ட பகுதி ஏறக்குறைய பாத்திரத்தின் கனவளவின்
1)அரைவாசியாகும் 2)முக்கால்வாசியாகும்
3)கால்வாசியாகும் 4)மூன்றில் ஒரு பகுதியாகும்

(17)



அருகே காட்டப்பட்டுள்ள அடையாளமானது ஒரு சர்வதேச நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடையது. அந்த நிறுவனத்தின் பெயர்.
1)ICRC 2)UNHCR 3)UNICEF

(18)



அருகே உள்ள அடையாளமானது ஒரு நாட்டின் தேசிய இலட்சினையாகும். அந்த நாட்டின் பெயர்.
1)இந்தியா 2)இலங்கை 3)நோர்வே 4)அமெரிக்கா


(19)




அருகே உள்ள படத்திற்குரியவர்கள்
1)வைத்தியசாலை செல்கின்றார்கள்
2)விளையாடச் செல்கின்றார்கள்
3)பாடசாலைக்குச் செல்கின்றார்கள
4)கோவிலுக்குச் செல்கின்றார்கள்

(20) மருத்துவ மூலிகையாகப் பயன்படும் ஒரு தாவரம்
1)தூதுவளை 2)கற்பூரவள்ளி 3)இஞ்சி 4)மேற்சொன்ன மூனறும்


(21) கீழ்வரும் உருக்களில் $\frac{25}{75}$ எனும் பின்னம் நிழல்படுத்தப்பட்டுள்ள உரு



(22) வேறுபாடான உருவின் கீழ்க் கோடிடுக



(23) யாழ்ப்பாணத்தின் கற்பகதரு என அழைக்கப்படும் தாவரம்
1)தென்னை 2)மா 3)பனை 4)வாழை




அருகே உள்ள A,B,C என்னும் வரைபுகள் குறித்த நாட்களில் மாணவர் வரவு பற்றிய விபரத்தை வெளிக்காட்டுகின்றன. இதனை அவதானித்து சரியான விடையைத் தெரிவுசெய்க.

(24) மாணவர் வரவு அதிகரிப்பதைக் குறிக்கும் வரைபு
1)வரைபு A 2)வரைபு B 3)வரைபு C

(25) மாணவர் வரவு குறைவடைவதைக் குறிக்கும் வரைபு
1)வரைபு A 2)வரைபு B 3)வரைபு C

☼ தரப்பட்டுள்ள விபரங்களுக்கு ஏற்ப பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(26) கரப்பான் என்னும் பூச்சி கரியநிறம் உடையது. வேகமாக ஓடக்கூடியது. பறக்கவும் கூடியது. தற்செயலாக அது வேறு அங்கி ஒன்றிடம் அகப்பட்டுக்கொண்டால் மிகவும் அருவருக்கத்தக்க மணம் உடைய திரவம் ஒன்றை வீசும்.
இவ்வியல்புகள் இப்பூச்சிக்குக் காணப்படுவது
1)பாதுகாப்பிற்காக 2)சிறப்பியல்புக்காக
3)சூழலில் வாழ்வதற்காக 4)நீண்டகாலம் இருப்பதற்காக

(27) கள்ளி என்னும் தாவரம் இலைகள் அற்றது. ஆனால் தண்டு இலையின் நிறத்தைக் கொண்டிருக்கும். மேலும் பால் என்னும் நீர்த்தன்மையான பதார்த்தத்தையும் கொண்டுள்ளது.
இவ்வியல்புகள் உள்ளமையால்,
1)இது நீர்குறைவான வறள் நிலங்களிலும் வாழ்வதற்கு ஏற்ற இயல்பைக் கொண்டிருக்கின்றது.
2)இத்தாவரத்திற்கு அழகைக் கொடுக்கின்றது.
3)இத்தாவரத்தை ஏனைய தாவரங்களில் இருந்து வேறுபடுத்திப்பார்க்க முடிகின்றது.
4)மேற்சொன்ன கூற்றுக்கள் எவையுமே பொருத்தமற்றவை.

(28) பிரதாபன் தன்னிடம் உள்ள ஓட்டை வாளி ஒன்றைப் பயன்படுத்தி தோட்டத்தில் உள்ள கத்தரிக்கு நீர் ஊற்ற முயன்றான். அவன் கிணற்றடியில் இருந்து கத்தரியை அடைய முன்னர் நீர் முழுவதும் ஓடிவிடும். எனினும் அவன் விடாது முயற்சி செய்துகொண்டே இருந்தான்.
பிரதாபனை சரியாக விபரிக்கும் கூற்று
1)அவன் கடும் முயற்சி உடையவன் 2)அவன் ஒரு பைத்தியக்காரன்
3)அவன் மிகவும் திறமைசாலி 4)அவன் ஒரு சோம்பேறி

(29) வரன் - குறும்புக்காரன். அப்பம்மாவின் அளவில்லாப் பாசமுள்ளவன். இன்று புத்தகப்பை தோளில் கொழுவி - புதிய சப்பாத்துப் போட்டு - தொப்பி அணிநது - பாடசாலை அனுபவமில்லாத அவன் படிப்பதற்காக அதோ செல்கின்றான்.
வரன் பற்றிக் குறிப்பிடப் பொருத்தமான சொல்.
1)வரன் ஒரு மாணவன்
2)வரன் ஒரு ஆசிரியர்
3)வரன் முதல் தடவையாக பாடசாலை செல்கிறான்
4)வரன் ஒரு உல்லாசப்பயணி

(30) ஒரு அமாவாசை நாள் எங்கும் ஒரே கும்மிருட்டு. அப்போது நள்ளிரவு 12.00 மணியிருக்கும். கதவை யாரோ வேகமாகத் தட்டுகிறார்கள். நாய் அவக் அவக்கெனக் குரைக்கின்றது. நான் கதவைத் திறக்கின்றேன்.
இதன்மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வு,
1)பயம் 2)கோபம் 3)வீரம் 4)இரக்கம்

☼ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(31) இரு சகோதரிகள் பாடசாலை செல்லும் வழியில் தமது சகோதரனைச் சந்தித்தார்கள். அவர்களில் ஒருத்தி அவனது தங்கையல்ல எனில் அவள் யார்?

..................................................................

(32) விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்பத்தில் தீப்பந்தம் ஒன்று ஏற்றப்படும் இந்நிகழ்ச்சி எவ்வாறு அழைக்கப்படும்?

..................................................................

(7 ஆம் பக்கம் பார்க்க...)

# தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பெண்களின் தொகை 3097 ஆல் அதிகரிப்பு

(சாவகச்சேரி)

புள்ளிவிபர தரவுகளின்படி தென்மராட்சியில் ஆண்களின் தொகையோடு ஒப்பிடுகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிட மூவாயிரத்து தொண்ணூற்றேழு அதிகரித்ததாகக் காணப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தனங்களப்பு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் கிராம அலுவலகர் பிரிவுகள் தவிர்ந்த ஐம்பத்தேழு கிராம அலுவலகர் பிரிவுகளில் இவ்வாண்டு(2005) மார்ச் 31ஆம் திகதி வரையான கணிப்பீட்டுத் தரவுகள் வெளியாகியுள்ளன.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கிராம அலுவலகர் பிரிவுகளில் மொத்த சனத்தொகை 19,385 ஆகும். இதில் ஆண்களின் எண்ணிக்கை 9ஆயிரத்து 363மட்டுமே.

மேலும், 825குடும்பங்களைக் கொண்டுள்ள கோவில் குடியிருப்பு ஜே/301கிராம அலுவலகர் பிரிவில் ஏனைய கிராம அலுவலகா பிரிவுகளோடு ஒப்படுகையில் மிகவும் அதிகாித்த சனத்தொகையாக 2ஆயிரத்து 839பேர் காணப்படுகின்றனர். அத்தோடு ஜே/300கிராம அலுவலகர் பிரிவில் ஆயிரத்து 496பேரே வசிக்கிற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகக் குறைந்தளவு மக்களையுடைய ஜே/298-மறவன்புலோ கிராம அலுவலகர் பிரிவில் 37குடும்பங்களைச் சேர்ந்த 161பேர் உள்ளனர். குடும்பங்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் சனத்தொகைக் கட்டுப்பாடுடைய பிரிவாக ஜே/293-கைதடி மேற்கு கிராம அலுவலகர் பிரிவு காணப்படுகின்றது. இங்கு சராசரி குடும்ப அங்கத்தவர் -மூன்றாக உள்ளது. 408 குடும்பங்களில் ஆயிரத்து 335 பேரே காணப்படுகின்றனர்.

மேலும், 187குடும்பங்களைச் சேர்ந்த 630 பேர் கல்வி, தொழில் இதர காரணங்களிற்காக வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக வதிபவர்களாக உள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலக மொத்த சனத்தொகையில் ஆணகளின் தொகை 34ஆயிரத்து 845ஆக உள்ள போது இத்தொகையை விட பெண்களின் எண்ணிக்கை 3097ஆல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மறவன்புலோ தவிர்ந்த, தனங்களப்பு, கரம்பகம், எழுது மட்டுவாழ் தெற்கு பிரிவுகள் கணிப்பீடுகள் சரியாக மேற்கொள்ளபபடவில்லை. (ற-21)

# மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ள மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

ஆசியாவிலேயே முதல்தர கூட்டுறவு வைத்தியசாலையாக இயங்கிவந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நாட்டின் போர்சசூழல் காரணமாக சிலகாலம் இயங்காமல் இருந்தது.

இவ் வைத்தியசாலையின் வரலாற்றை அறிந்த வெளிநாட்டு நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், தனிநபர்கள் ஆகியோரின் பங்களிப்பினால் இவ் வைத்தியசாலை தனது சேவையை நவீனமயப்படுத்தலுடன் மக்களுக்குத் தொண்டாற்றத் தொடங்கியுள்ளது.

இவ்வைத்தியசாலையில் 24 மணிநேர வைத்தியசேவை (வெளிநோயாளர் பகுதி, உள்ளக நோயாளா பகுதி, மகப்பேற்று வசதி.

கண்வைத்திய நிபுணர் சேவை (ஞாயிறு, புதன், வெள்ளி) மாலை 4.30மணி.

மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை- புதன் மாலை 4.30மணி.

இருதய வைத்திய நிபுணர் சேவை- வியாழன் மாலை 4.30மணி.

பற்சிகிச்சை வைத்திய சேவை- சனி மாலை 5.00 மணி. (தினமும் 12மணி -2மணி வரை).

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இவ் வைத்தியசாலை தனது சேவையினை குறைந்த கடடணத்தில் நிறைவாக செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# விஷேட சத்திர சிகிச்சை 21, 22 ஆம் திகதிகளில்!

(பொன்னாலை)

அண்ணப்பிளவு, உதட்டுபிளவு குறைபாடுகளினால் பீடிக்கப்பட்டவர்களுக்கான விஷேட சத்திர சிகிச்சை எதிர்வரும் 21, 22ஆம திகதிகளில் யாழ.போதனா வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இச் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளவென காலி மருத்துவமனையிலிருந்து விசேட சத்திர சிகிச்சை நிபுணர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அண்ணப்பிளவு, உதட்டு பிளவு சங்கமும, யாழ் றோட்டரிக் கழகமும் இணைந்து இவ் விஷேட சத்திரசிகிச்சை முகாமை ஏற்பாடு செய்துள்ளன. (ற-49)

# சட்டவிரோத மது விற்பனை மின்பாவனைகள் அதிகரிப்பு

(பொன்னாலை)

வலி -மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் தொடர்ந்தும் சட்டவிரோத மது விற்பனைகள் - சட்டவிரோத மின்பாவனைகள் இடம்பெற்றுவருவதாக அப்பகுதி பொது அமைபபுகள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன.

மேற்படி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த யாருமே முன்வர மாட்டாரகளா? எனவும் அவ் அமைபபுக்கள் கேள்வி எழுபபியுள்ளன.

சட்டவிரோத மது விற்பனையால் பல சச்சரவுகள், சண்டைகள் ஏற்பட்டுவருவதாகவும் - சட்டவிரோத மின்பாவனையால் அநியாய உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருவதாகவும் மேற்படி அமைப்புக்கள் கவலை வெளியிட்டு வருகினறமை குறிப்பிடத்தக்கது. (ற-49)

## புத்தகக் கண்காட்சி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியல் "சொண்ட்" நிறுவனம் நடாததும் புத்தகக் கண்காட்சி இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9.00மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ள இப்புத்தகக் கண்காட்சியில் பல்துறை சார்ந்த புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவாகள் வரை அனைத்து அறிவியல் ஆர்வமுடையோரையும் இதில பங்குபறறிப் பயன்பெறுமாறு வேண்டப்பட்டுள்ளது. (ற-74)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தலைவர் அ.கனகையா தலைமையில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியப பெருவிழா போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாடகம் எழுத்துப் பிரதிப் போட்டி, சித்திரப்போட்டி, நாட்டுப்புறப்பாடல் மற்றும் கலை நிறுவனங்களுக்கான நடனப் போட்டி என்பன இதற்காக நடாததப்படவுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பங்களை வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர்/பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-2)

## விளையாட்டுப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையால் நிர்வகிக்கப்பட்டுவரும் முன்பள்ளிகளில் ஒன்றாகிய தென்மட்டுவில் கலைமகள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் குணமணி தேவி ஆறுமுகம், தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், நுணாவில் மேற்கு கிராம அலுவலர் வை.துரைசிங்கம், மட்டுவில் மத்தி கிராம அலுவலா க.வாமதேவன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ற-21)

## கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சிக்கான கலாசார மண்டப அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சிவன் ஆலய அருகே உள்ள கலையரங்கருகே இடம் பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், நிர்வாக உத்தியோகத்தர் வீரசிங்கம் மற்றும் பல கிராம அலுவலக உத்தியோகததர்களால் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் நிதி ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-21)

# குமுதினி பயணிகள் படகு நடுக்கடலில் பழுதானது

(யாழ்ப்பாணம்)

குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கிச் சென்ற குமுதினி பயணிகள் படகு நடுக்கடலில் நேற்று முன்தின்ம் பழுதாகியது.

சுமார் நூறிற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு பிற்பகல் 4.30 மணிக்குப் புறப்பட்ட குமுதினப் படகு, புறப்பட்ட சிறிது நேரத்தில் பழுதானது. இதனால அதிலிருந்த பயணிகள் அல்லோலகல்லோலப்பட்டனர். ஒருமணி நேரம் கடலில் தத்தளித்த படகினை நயினாதீவிலிருந்து புறப்பட்டுச் சென்ற படகொன்று மீட்டு கரைக்கு இழுத்துச் சென்றது.

இதேவேளை, பிற்பகல் 5.30 மணியளவில் நெடுந்தீவிலிருந்து பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான படகொன்று வரவழைக்கப்பட்டு அதில் பயணிகள் ஏற்றப்பட்டு நெடுந்தீவுக்குப் பயணம் மேற கொள்ளப்பட்டது.

இதில் 60 பயணிகளே பயணம் செய்ததாகவும் ஏனையவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# இராணுவ அதிகாரிக்கு எதிராக ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

புதிதாக கடமையேற்றுள்ள சுழிபுர கடற்படைக் கட்டளை அதிகாரி, தமது தொழிலாளர்கள கடற்தொழிலுக்குச் செலலுமபோது பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாகக் கூறி, சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினரால் நேற்றுமுன் தினம மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கடற்படைக் கட்டளை அதிகாரிக்கும் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தினருக்குமிடையே நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது. அதில் பல்வேறு பிரச்சினைக்கு இணக்கம் காணப்படடது. எனினும் அக் கட்டளை அதிகாரி, கடற்தொழிலாளர்கள் நான்கு பேர் தம்மிடம் வாக்குவாதபபட்டதாகக் குறிப்பிட்டு இளவாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன் குறிப்பிட்ட நால்வரினதும் அனுமதி அட்டைகளை பறிமுதல் செய்து அவர்களை கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதியளிப்பதில்லை எனவும அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

( 6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

(33)ஒரு நாளின் நள்ளிரவு 12.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையான காலப் பகுதியை எவ்வாறு அழைக்கலாம்?

.....................................................................

(34)இலங்கையில் வாழும் பிரஜை ஒருவர் தனது அடையாளததை வெளிப்படுத்த என அரசினால் வழங்கப்படும் ஆவணம் எது?

.....................................................................

(35)021-222-2414 இந்த இலக்கங்களை அழுத்துவதன் மூலம் ஒருவர் பெறத்தக்க சேவை என்ன?

.....................................................................

(36) அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது?

.....................................................................


☼கீழே தரப்பட்டுள்ள பொருட்களை அதிகளவில் உபயோகிப்பவர் பெயரை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(37)



1)வைத்தியர்
2)ஆசிரியர்
3)மேசன்

(38)




1)ஆசிரியர்
2)தொழிலாளி
3)சிறுபிள்ளை

(39)



1)வைத்தியர்
2)அம்மா
3)சிறுபிள்ளை

(40)



1)ஆசிரியர்
2)மாணவர்
3)வைத்தியர்

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 07

மாணவர் முழுப்பெயர் : ..............................................

பாடசாலையின் பெயர் : ..............................................

வீட்டின் முகவரி : ..............................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 17.05.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# இந்து ஆலயங்களின் வழிபாட்டுச்சின்னங்கள்

# பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்

ஈழத்தமிழரின் பூர்வீக வரலாற்றோடு ஒன்றியது தான் இந்து மதமும், ஆலயங்களும், விக்கிரகங்களும் மற்றும் அவற்றோடு இணைந்த வேல், சக்கரம், நாக பாம்பு போன்ற புராதன பூர்வீக வரலாற்று வழிபாட்டுச் சின்னங்களுமாகும். பழயதங்கம், வெள்ளி, செமபினாலான நகைகள் மற்றும் பழமை வாய்ந்த பாவனைப் பொருள்கள் இவைகள் பூர்வீக தமிழர்களின் வரலாற்றுச் சான்றுச் சின்னங்கள். இந்து ஆலயங்களின் தொன்மையான வரலாற்றை உணர்த்தி நிற்கின்ற உயிர் ஆவணங்கள் விலைமதிக்க முடியாத வரலாற்றுச் சான்றுச் சின்னங்களை தகுந்த கண்காணிப்புடன் பேணிப் பாதுகாக்க வேண்டியது இந்து ஆலய நிர்வாகிக்ளின் தலையாய கடமையாகும்.

மிக அண்மைக் காலத்தில் குறிப்பாக இந்து ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் தேர் சிற்பங்கள் பொம்மைகள் என்பன திருடர்களால் திருடப்பட்டு சாக்கு மூட்டைகளில் கட்டப்பட்டு கொழும்பிற்குக் கடத்தப்பட்ட செய்திகள் நாம் அறிந்ததே. கோண்டாவிலில் உள்ள ஆலயம் ஒன்றிலிருந்து திருடப்படட விக்கிரகங்கள் மாத்திரம் கோப்பாய் பொலிஸாரின் திறைமையால் கைப்பற்றப்பட்டது. மற்றும் பல சிறிய ஆலயங்களில் நடைபெறற திருட்டுகள் பல வெளியில் தெரியாமலே உள்ளன. கொட்டாஞசேனை பொலிஸார் ஆலயம் ஒன்றின் விக்கிரகங்களை கைப்பற்றி மேற்படி ஆலய நிர்வாகிகளிடம் கையளித்ததாக பத்திரிகை செய்திகள் மூலம் அறிய முடிந்தது.

பிரசித்திபெற்ற ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களும் சிறிய ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களும ஒன்றுசேர வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களே. அவற்றை முப்போதும் தீண்டத் தகுந்தவர்கள் அந்தணர்கள் மற்றும் உள்ளாந்த பக்தி பூண்ட ஆசார சீலர்கள் மற்றவாகள் அவ் விக்கிரகங்களுக்கு அண்மையில் செல்லவே அஞ்சி தூரத்தே நின்று பயபக்தியுடன் ஐம்புலன்கள் ஆரமெய்மறந்து வழிபடுகின்ற மனித வழிபாட்டு விக்கிரகங்கள் அவற்றின் முன் நின்றுதான் பிரார்த்தித்து இறைஞ்சி வேண்டுகின்றோம். அவ்விக்கிரகங்களை திருடி சாக்கு மூட்டைகளில் கட்டி கொழும்பிற்குக் கடத்துவது தனிநபர்களான திருடர்களா அல்லது இந்துமத விரோத மதவாத சக்திகளா என்பது தெரியாத நிலையில் பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல் சிவ ஆலய நிர்வாகிகள் தொன்மைவாய்ந்த ஆலய பூர்வீக வரலாற்றுக் கலைச் சின்னங்களை விலைக்கு விற்றதான செய்திகள் அடிபடுகின்றன. தமிழர்களினதும் இந்து ஆலயங்களினதும் வரலாற்றை பூர்வீகத்தை எடுத்தியம்புகின்ற ஆவணச் சின்னங்களை விலைக்கு விற்கும் கொடுமையான செயல் நிறுத்தப்படவேண்டும். அலை கலைச் செல்வங்கள் பல நூற்றாண்டுகளாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட புராதன பூர்வீக வரலாற்று வழிபாட்டுச் சின்னங்களை அவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டிய பாதுகாவலர்களே விற்பனை செய்வது வேலியே பயிரை மேய்ந்த கதைக்கொப்பானது. விக்கிரகங்களை திருடி விற்கினற கொடியவர்களின் கொடுமையான செயலை விட கொடுமையான செயல் பூர்வீக் வரலாற்றுக் கலைச் சின்னங்கள் உலகம் உள்ளவரை பேணிப் பாதுகாக்க வேண்டிய புனித சின்னங்கள். அவை விற்பனைப் பொருள்கள் அல்ல. அவற்றை விலைக்கு விற்பது கூடிய பெறுமதிமிக்க தங்கப் பவுண் என்பதற்காக தீயிலிட்டு உருக்கி விற்பது கொடுமையிலும் கொடுமை. வருங்காலச் சமுதாயத்திற்கு செய்கின்ற பெரும் கொடுமை. அவை காலத்தால் அழிக்கமுடியாத சான்றாவண உயிர்ச்சின்னங்கள். போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய புனித சின்னங்கள். விலைமதிக்க முடியாத கலைப் பொக்கிசங்கள். அவற்றை விற்பனை செய்வது சுனாமிக் கொடுமையைவிட கொடுமையான செயலாகும். யாரொடு நோவது யார்க் கெடுத்துரைப்பது.

**"தீவகத்தான்"**

பூர்வீக நாகர் காலத்து வழிபாட்டுச் சின்னங்கள் நாக பாம்பு, நாகப் பிரதிஷ்டைகள் நாட்டுக் கோட்டை செட்டிமார் காலத்து பவுண் திரு ஆபரணங்கள் மற்றும் பூர்வீக வரலாற்றுச் சின்னங்கள் அவை.

பாதுகாத்து போற்றப்படவேண்டிய வரலாற்று சான்றாவண சின்னங்கள் இவற்றை கூடிய மதிப்புடைய தங்கப் பவுண் என்ற வியாபார நோக்கோடு நோக்காது பூர்வீக வரலாற்றை எடுத்தியம்புகின்ற புனித வழிபாட்டு சின்னமாகப் போற்றி வழிபடவேண்டிய புனித சின்னங்களாக நோக்க வேண்டும் வழிபடவேண்டும்.

பூர்வீக புனித சின்னங்களை பாதுகாக்கவேண்டியவர்கள் சைவச் சானறோர்கள். புராதன பூர்வீக வரலாற்று வழிபாட்டுச் சின்னங்களை போற்றிப் பாதுகாக்க வேண்டியது சைவச் சான்றோர் கடமையாகும். பல நூற்றாண்டு கால கலைப் பொக்கிசங்கள் அரும பெரும் செல்வங்கள் அவற்றை விற்பதோ அழிப்பதோ தமிழர் கலாசாரத்திற்கும் இந்துப் பாரம்பரிய வரலாற்றிற்கும் செய்கின்ற பெரும் துரோகமாகும்.

## பதில் நீதவான் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பிரபல சட்டத்தரணியும், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளருமான தி.பொன் பூலோகசிங்கம, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.


அண்மையில், மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து அவர் பதவியேற்றுக்கொண்டார். (ச)


## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு, பெரியபுலம் ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக மண்டல பூர்த்தித் திருநாள் பஞ்சகுண்ட பஷ நவோத்திர சகஸ்ர மஹாகும்பாபிஷேகம எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணக்கு இடம்பெறவுள்ளது. (ரு-2)

## நேற்றைய ஹர்த்தாலின் போது...







யாழ்.பேருந்துத் தரிப்பிடம்...


வெறிச்சோடியிருக்கும் யாழ்.நகரம்...

# அரசின் அத்துமீறிய செயற்பாடுகளால் நாட்டில் பல அநாவசிய பிரச்சினைகள்

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

நாட்டினுள் அநாவசியமான பிரச்சினைகள் பலவற்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளதாக ஐக்கியதேசியக்கட்சி குற்றம்சாட்டியுள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு துறைகளில் அநாவசிய சிக்கல்கள் தோன்றியமைக்கு இதுவே காரணம் என்று கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி விசாரணைக்குழுவினால் தேசயப் பாடசாலைகளில் அரசின கரங்கள் நீண்டமையினால் பாடசாலை அமைப்பில் பலவேறு குளறுபடிகள் உருவாக்கப்பட்டன.

கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையின் பக்கமும் அரசின் ்கைகள் நீண்டமையினால் மேலும் பிரச்சினைகள் உருவாகின.

புதிதாக பௌத்தர்களின் புனித சின்னமான தலதாமாளிகையின் பக்கமும் அரசின் கரங்கள் நீள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டில் தலதாமாளிகை தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் மீறப்படுகின்றமை அஸ்கிரிய மல்வத்தபீட மகாநாயக்கர்களின ஆலோசனை உபதேசங்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற செயல்கள் என்பன வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. தலதாமாளிகையின் ஜெயவதனே நிலமேயினை நியமிப்பது குறித்த முக்கியமான வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவுள்ள இந்தவேளையில், அரசு தனது கரங்களை புத்த சாசன அமைச்சின் பக்கம் நீட்டுவதை இலங்கையின் பௌத்த மக்கள் சார்பில் கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரு-4)

# பொதுக்கட்டமைப்பை வழங்குவது நாட்டைப் பிரிப்பதற்கான முதற்படி

## தேசிய பிக்குகள் முன்னணி எதிர்ப்பு

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்குவது, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அவர்களுக்கு வழங்குவதற்கு சமமானது என்றும், இது நாளடைவில் நாட்டைப் பிரிப்பதற்கான முதற்படியாக அமையுமென்றும் தனது எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக தேசிய பிக்குகள் முன்னணி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்திலேயே குறிப்பிட்டுள்ளது.

அரச நிதியைப் பகிர்வது, செலவு செய்வது அல்லது ஒதுக்குவதற்கு, சட்டப்படி தெரிவான அரசாங்கத்திற்கு மட்டுமே உரிமை இருக்கிறது. இந்த சட்டத்திற்கு முரணாக, விடுதலைப் புலிகளுடன் நிதிப்பங்கீட்டிற்கான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. சில வெளிநாட்டு சக்திகளும், ஐ.தே. கட்சியும் இதுபோன்ற இணக்கப்பாட்டை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தும்படி தொடர்ந்து அழுத்தம் கொடுத்தும் ஆதரவு கொடுத்தும் வருகின்றன. ஆனால், இத்தகைய பொதுக் கட்டமைப்பை முற்றாக நிராகரிக்க வேண்டுமென்று ஜனாதிபதியை இந்த முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது. சுனாமி நிவாரணத்துக்கான பொதுககட்டமைப்பு குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறி பிரதமர் மகிந்த ராஜ பக்ச தப்பிக்க முயற்சித்துள்ளதைக் கண்டித்துள்ள இந்த முன்னணி, அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் பொறுப்பை சரியாக செய்வது முக்கியமானது என்றும் எச்சரித்துள்ளது. (04)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு, பெரியபுலம் ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11நாட்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், மறுநாள் தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ரு-2)

# மன்மோகன் சிங் - புடின் மொஸ்கோவில் சந்திப்பு அணுமின் திட்டங்களுக்கான உதவிகள் தொடரும்

(மொஸ்கோ)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் நேற்று முன்தினம் மொஸ்கோவில் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து இருதரப்பு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க கூட்டு ஆய்வுக்குழு அமைக்க முடிவுசெய் யப்பட்டுள்ளது.



அதேபோல், ஆக்கபூர்வமான பணிக ளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

இரண்டாவது உலகப்போரில் ஜெர்ம னிக்கு எதிராக அன்றைய சோவியத் யூனி யன் பெற்ற வெற்றியின் 60 ஆண்டு விழாவைக் கொண்டாட 50க்கும் மேற் பட்ட நாடுகளின் தலைவர்கள் மொஸ் கோவில் கூடியிருந்தனர்.

விழா முடிந்தவுடன், பிற்பகலில் மன் மோகன் சிங்கும், புடினும் இருதரப்பு உற வுகள் தொடர்பாக தனியாகப் பேச்சுவார் த்தை நடத்தினர். முதலில் 30 நிமிடங் களுக்குத் திட்டமிடப்பட்டிருந்த இப்பேச்சு வார்த்தை 45நிமிடங்கள் வரை நீடித்தது.

இந்தியக் குடியரசுத் தலைவர் இநத மாத இறுதியில் ரஷ்யா வில் மேற்கொள்ள இருக்கும் பயணத்தை ஆவலுடன் எதிர்பார்ப்ப தாகக கூறிய புடின், பிரதமரின் விஜயத்தை யும் எதிர்பார்ப்பதாகக் கூறினார். இந்த ஆண்டு நவம்பரில் வருவதாக பிரதமர் பதிலளித்தார்.

இருதரப்பு உறவு கள் தொடர்பாக விரி வாக விவாதிக்கப்படடது. பொருளாதார வளர்ச் சியை மேலும் அதிகரிப பதற்கான வழிமுறை களை ஆராய கூட்டு ஆய்வுக்குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது. மன்மோகன் சிங் தெரி விதத இந்த யோசனை யைப் புடின் உடனடி யாக ஏற்றுக்கொண்டார்.

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு ரஷ்யா அளித்துவரும் ஆதரவுக்கு மகிழ்ச் சியையும் நன்றியையும் தெரிவித்தார் பிரதமர். அத்திட்டத்துக்குத் தேவையான உதவிகள் தொடர்ந்து அளிக்கப்படும் என புடின் உறுதியளித்தார்.

எாிசக்தித்துறையில ஒத்துழைப்பை அதி கரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதுதொடர்பாக, அடுத்த ஒருசில தினங்களில் ஆய்வு மேற் கொள்வதாக புடின் உறுதியளித்தார். எரிசக்தித்துறையில் இந்திய நிறுவனங் கள் ரஷ்யாவில் முதலீடு செய்வதில் புடின் ஆர்வம் காட்டினார்.

அணுசக்தியை ஆக்கபூர்வமான பணி களுக்குப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அதன் விநியோக (சட்டவிரோத நடவடிக்கைகள தடுப்பு) மசோதா 2005, விரைவில் இந்திய நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட வுள்ளது. இதற்கு மத்திய அமைச்சரவை ஏற்கெனவே ஒப்புதல் வழங்கிவிட்டது என்று புடினிடம் பிரதமர் தெரிவித்தார். அச்சட்டம் நிறைவேறினால், அணுசக்தி விநியோகத்தில ரஷ்யாவுக்கு உள்ள சந்தேகங்கள் தீர்ந்துவிடும்.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் இந தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி தொடர்பாக இப்பேச்சில் விவாதிக்கப்பட வில்லை. ஏற்கெனவே, இந்தியாவுக்கு வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் பதவியை அளிக்க ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது என்றார் ரஷ்யா வுக்கான இந்தியத் தூதர் கன்வல் சிபல்.

முன்னதாக, உலகத் தலைவர்களுக்கு புடின் மதிய விருந்தளித்தார். அப்போது ஜோர்ஜ் புஷ், பிரான்ஸ், ஜேர்மனி, சீனா உள்ளிட்ட பல நாடுகளின் அதிபர்களைச சந்தித்தார் மன்மோகன் சிங். (ற)



பால் தரும் மாடாகட்டும், வண்டி இழுக்கும் குதிரையாகட்டும் வெளி யில்தான் கட்டிவைக்கப்படும். ஆனால் நாம் வளர்க்கும் நாய்க்கு மட்டும் நமது வீட்டிலேயே இடமிருக்கும். நன்றிக்கு உதாரண மாக சொல்லப்படும் நாயின் அன்பிற்கு அளவே இல்லை. அப்படிப்பட்ட நாய்களைத் துன் புறுத்தக் கூடாது என்பதை வலி யுறுத்தி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் பல வித்தை கள் புரிந்து மக்களை ஆச்சரியத் திலும், ஆனந்தத்திலும் ஆழ்த்திய நாய்க்குட்டியொன்று.

# மலேஷியாவுக்கு அமெ. பாராட்டு

தீவிரவாதத்தினையும், வட்டாரப் பிரச் சினைகளையும் மிக அற்புதமாகவும், திறமையாகவும மலேஷியா கையாண்டு வருவதாக அமெரிக்கா பெரிதும் பாராட டியுள்ளதாக மலேசியத் துணைப் பிரத மர் தெரிவித்துள்ளார்.

**ASIA MEDIA SUMMIT** - 2005 என்ற நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்த பின்னா செய்தியாளர்களிடம் பேசிய போது,

தவிரவாதத்துக்கு எதிரான மலேஷி யாவின் உறுதியான போக்கை நாட்டிற்கு வருகை மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் மிகவும் பாராட்டியுள்ளதாகத் துணைப் பிரதமர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்கா தெரிவித்துள்ள திட்டங்களை மலே ஷியா பரிசீலித்து அமுல்படுத்தும் என வும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## தமிழக அரசின் மீது நம்பிக்கை இல்லை

# தேர்தல் பணிகளுக்கு மத்திய அரசு ஊழியர்கள்

காஞ்சிபுரம் மற்றும் கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதிகளில் அடுத்த சனிக் கிழமை வாக்குப்பதிவு நடைபெறவிருக் கிறது.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து காஞ்சி புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வெங் கடேசன் அளித்த பேட்டியில், அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்குப் பதிவு முழுவதும் வீடியோ பதிவு செய்யப் படுமென்றும் வாக்குச் சாவடிகள் அனைத் திலும் மத்திய அரசு ஊழியர்களே தேர் தல் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் கூறினார்.

தொகுதியில் உள்ள திருமண மண்ட பங்கள் அனைத்தையும் காவல்துறையினர் தங்கள் கட்டுப்பாட்டுககுள் எடுத்துள்ளதாக அறிவித்த வெங்கடேசன் வரும் 12ஆம் திகதிக்குள் அங்கு தங்கியிருக்கும் வெளி யாட்கள் அனைவரையும் வெளியேற உத் தரவிடப்பட்டுள்ளது என்றார்.

வனமுறைகளில் ஈடுபடுபவர்களைக கண்டதும சுட உத்தரவிடப்பட்டிருப்பதாக வும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே தமிழக தலைமைத் தேர்தல் ஆணையர் நரேஷ் குப்தா வெளி யிட்டுள்ள அறிக்கையில், அந்தந்த வாக் குச் சாவடிகளுககு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களைத்தான் வேட்பாளர்களின தேர்தல் ஏஜண்டுகளாக நியமிக்க வேண்டு மெனத் தேர்தல் ஆணையம் உத்தரவிட் டுள்ளதாகத் தெரிவித்தார். (து)

# விற்பனைக்கு வருகிறது மறைந்த பாப்பரசரின் கார்

(வோஷிங்டன்)

மறைந்த போப்பாண்டவர் 2ஆவது ஜான் பால் பயன்படுத்திய கார், அமெரிக காவில் ஏலம் மூலம் விற்பனைக்கு விடப் படவுள்ளது. 30 ஆண்டுகள் பழைமை யான அந்தக் கார், ரூ.6.75 கோடியிலி ருந்து ரூ.22.5 கோடி வரை விலைபோகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது 1975ஆம் வருடத்திய ஃபோர்டு எஸ்கார்ட் வகை காராகும். அந்த ஒரு கார்தான் போப்பாண்டவர் 2ஆவது ஜான் பாலுக்குச் சொந்தமாக இருந்ததாகக் கூறப படுகிறது. அதை அவர் 1996இல் ஏலம் மூலம் விற்பனை செய்தார். அப்போது அமெ ரிக்காவின் இல்லினாய்ஸைச் சேர்ந்த தொழிலதிபர் ஜிம் ரிச், அதை ரூ.45 இலட சத்து 90ஆயிரத்துக்கு வாங்கினார். இப்போது அந்தக் காரை அவர் ஏலம் மூல மாக விற்பனை செய்யத் திட்டமிட்டுள் ளார்.

அமெரிக்காவின் 'குரூஸ் இன்டர் நேஷனல்' நிறுவனம் மூலம் ஜூன் 3 மற்றும் 4 திகதிகளில் அது விற்கப்பட வுள்ளது. "நான் போப்பாண்டவரிடமி ருந்து அந்தக் காரை வாங்கியபோது, அதற்கான தொகைக்கு ஒரு காசோ லையை அவரிடம் கொடுத்தேன். அவர் தமது காரின் சாவிகளை என்னிடம் கொடுத்தார். அப்போது எனது வாயிலி ருந்து வார்த்தைகளே வரவில்லை. அந்த அளவுக்கு நான் பதற்றத்தில் இருந்தேன்.

"நீங்கள் கார் சாவிகளை வைத் திருபபது போல ஒரு புகைப்படம் எடுத் துக்கொள்ள அனுமதிப்பீர்களா?" என்று போப்பாண்டவரிடம் கேட்டேன். அதைக் கேட்டு அவர் சிரித்தார்.

"காரை விற்றுக் கிடைத்த பணத் தைக்கொண்டு, ரோமில் உள்ள போலந்து யாத்திரீகர்கள் இல்லத்தை விரிவுப டுத்தினார்; போலந்தின் லூப்லினில் உள்ள கத்தோலிக்கப் பல்கலைக்கழ கத்தை விரிவுபடுத்தி, கல்வி உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்தார்'' என்று, 30 ஆண்டுகளுக்கு முன் நடந்ததை நினைவுகூர்ந்தார் ஜிம் ரிச்.

"அந்தக் காரை நான் வாங்கிய போது அது சுமார் ஒரு இலட்சம் கி.மீ வரை ஓடியிருந்தது. நான் சில கிலோ மீற்றர்கள் ஓட்டியிருக்கிறேன். போப்பாண டவரால் பயன்படுத்தப்படும் பாக்கியம் அந்தக் காருக்குக் கிடைத்திருக்காவிட டால், அது வெறும் 50ஆயிரம் ரூபாய்க் குத்தான் விலை போகும்'' என்றார் ஜிம் ரிச். (ற)

# கிழக்காசிய மாநாட்டுக்கு இந்தியாவிற்கு அழைப்பு

(கோலாலம்பூர்)

இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மலேசியாவில் நடைபெறவுள்ள கிழக்கு ஆசிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொள் ளுமாறு இந்தியாவை நிச்சயம் அழைப் போம் என்று மலேசிய வெளியுறவு அமைச சர் சையது ஹமீது அல்பர் தெரிவித் துள்ளார்.

இருப்பினும் இந்த மாநாட்டுக்கு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளை அழைப்பது நிபந்தனைக்கு உரி யதுதான் என்றும் அவர் கூறினார். (ற)

# இந்திய விஞ்ஞானிகளுக்கு ஜப்பான் விசா மறுப்பு

1998ஆம் ஆண்டு இந்தியா அணு குண்டு சோதனை நடத்திய பிறகு இது வரை 11 மூத்த இந்திய விஞ்ஞானிகளுக்கு ஜப்பான் விசா வழங்க மறுத்துள்ளது.

கடந்த 1998ஆம் ஆண்டு பொக்ரா னில் இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியது அமெரிக்கா உட்பட பல உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்தது. இதறகுப் பிறகு இந்தியா மீது அமெரிககா பல பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்நிலையில் பொக்ரான அணுகுண்டு சோதனை காரணமாக 1998ஆம் ஆண்டி லிருந்து இதுவரை 11 மூத்த இந்திய விஞ ஞானிகளுக்கு ஜப்பான விசா வழங்க மறுத் துவிட்டதாக அந்நாட்டுச் செய்தி நிறு வனம் தெரிவித்துள்ளது.

அணுகுண்டு சோதனை நடத்தப் பட்ட 1998ஆம் ஆண்டு ஒரு விஞ்ஞானிக கும் 2003ஆம் ஆண்டு 3 பேருககும், 2004ஆம் ஆண்டு 6பேருக்கம், இந்த ஆண்டு ஒருவருக்கும் மட்டுமே ஜப்பான் அரசு விசா வழங்க மறுத்துள்ளது.

விசா மறுக்கப்பட்ட 11 பேரில் 9 விஞ்ஞானிகள் ஜப்பானிலுள்ள அணு ஆராய்ச்சி மையத்திற்கும், 2 விஞ்ஞானி கள் அங்குள்ள பல்கலைக்கழகத்திற் கும் ஆராய்ச்சிக்காக அழைக்கப்பட்டிருந் தனர். ஆனால், இவர்களுக்கு ஜப்பான் அரசு விசா வழங்கவில்லை. (ற)

# அதிசயக் குழந்தை

மேற்குவங்கம் முர்சிதாபாத் நகரைச் சேர்ந்த ஒரு தம்பதியினருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந் தது. பிறக்கும்போதே பருமனாக இருந்த இந்த ஆண் குழந்தை 11 மாதத்தில் நாள் ஒன்றுக்கு 5 லீற்றர் பால் வரை குடிக்கிறது. மேலும் ஒரு கிலோ வரை அரிசி மாவு குடிக்கிறதாம்.

இந்தக் குழந்தையின் எடை 22 கிலோ. இப்போது இந்தக் குழந்தையைத் தூக்கமுடியாமல் தூக் கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு அலைகின்றனர் பெற் றோர்கள். மருத்துவ சிகிச்சையும் ஆரம்பமாகி விட்டது.

குழநதை சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிககிறான் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்தக் குழந்தை ஒரு புது வித்தியாசம் தான். (ற)



# பொது அறிவுத்திறன் விருத்திப் பரீட்சை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட அறிவுத்திறன் பரீட்சைநெறியில் வடகிழக்கிலுள்ள சிங்கள, முஸ்லிம் முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

வடகிழக்கிலுள்ள முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் மென்மேலும் அபிவிருத்தியைக் காண்பதை நோக்கமாகக் கொண்டும், முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பான தேடல்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிறுவனத்திற்கூடாக நடாத்தப்பட்ட வட கிழக்கிலுளள 1873 முன்பள்ளிகளில கல்வி கற்பிக்கும் 3640 ஆசிரியர்களுக்கும் அந்தந்த மாவுட்டங்களின் வலயமட்டங்களிலான பாடசாலைகள், பொது நோக்கு மண்டபங்களில் பொது அறிவுத்திறன் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

தவிர்க்க முடியாத காரணங்களால் அந்தந்த மாவட்டங்களில் ஒருசிலர் கலந்துகொள்ள முடியாமல் போனதைத்தவிர இந்தப் பரீட்சையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு பெரும்பாலான ஆசிரியர்கள் ஆர்வமுடன் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-04)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு உலகக் கனேடிய பல்கலைக்கழக நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினூடாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அனுசரணையுடன் தலா இரண்டாயிரம் ரூபா பணத்தையும், கோவை வைக்கின்ற பை, குடை என்பவற்றையும் வழங்கியுள்ளது.

நேற்று பிற்பகல் யாழ். றீடோ நிறுவனத்தில் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனேடிய நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெயராசசிங்கம், சண்டிலிப்பாய் உதவிப் பிரதேசச் செயலர் திருமதி அன்னி யோகநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ், யாழ். மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், றீடோ நிறுவனத் தலைவர் மாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியதையடுத்து ஒவ்வொரு மாணவருக்கும், மேற் குறிப்பிட்ட பணம் உட்பட அன்பளிப்புப் பொருட்களை வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாறான உதவிகள் கட்டம் கட்டமாக மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுமென கனேடிய நிறுவனப் பணிப்பாளர் ஜெயராசசிங்கம் தெரிவித்தார். (04)

## இராசி பலன்


11.05.2005
சித்திரை 28, புதன்கிழமை
திருதியை பிற்பகல் 4.44 மணிவரை
மிருகசீரிடம் நள்ளிரவு 12.01 மணிவரை
சுபநேரம் 4.24 - 5.54 மணிவரை
இராகுகாலம் 11.54 - 01.24 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, பண வருவாய், போசன சுகம். |
| இடபம் | தனவிரயம், விவாதம், காரிய தடங்கல், வேலைச்சுமை. |
| மிதுனம் | தெய்வ சிந்தை, தொழில் நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம். |
| கடகம் | பிரயாணம், அமைதிக் குறைவு, சுபசெலவு, தொழில் மந்த நிலை. |
| சிங்கம் | பெருமையடைதல், நண்பர்கள் உதவி, எடுத்த கருமங்கள்கைகூடும் போசன நன்மை. |
| கன்னி | உறவினர் உதவி, காரிய நன்மை, மேன்மை, ஆரோக்கியம். |
| துலாம் | புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, பிதாசிந்தை, ரோக நிலை. |
| விருச்சிகம் | உறவினர் வெறுப்பு, உடல் நலக்குறைவு, காரிய தடங்கல், வாகன பயம். |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும் சுகம், தொழில் நன்மை, புதிய தகவல். |
| மகரம் | சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, முயற்சிகைகூடும், புதிய தகவல். |
| கும்பம் | குடும்பக் கவலை, காரிய தாமதம், சிறு வியாதி, பணக்குறைவு. |
| மீனம் | மாதா சுகம், ரோகநிலை, எடுத்தகருமங்கள் தாமதம், மனச்சஞ்சலம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது
-வளவன்

# மருத்துவப் பயன்கள் மிகுந்த எலுமிச்சை

எலுமிச்சை என்பது, அமிலம் கூடவும் இனிப்பு குறைவாகவும் உள்ள ஆரெஞ்சு என்றும் கூறப்படுகிறது. எலுமிச்சையின் தாயகம் இந்தியாதான். ஆனால் இப்போது உலகின் பல இடங்களிலும் விளைகிறது. இந்தியா, மலேசியா, மெக்சிகோ, மேற்கு இந்தியத் தீவுகளில் அதிகமாக



விளைகின்றது. பழுககாத எலுமிச்சை பச்சை நிறத்தில் இருக்கும். நன்றாகப் பழுத்த பின்பு மஞ்சள் நிறமாகிவிடும். சர்வதேசமெங்கும் விரும்பப்படுகிற கனி எலுமிச்சை.

சித்தமருத்துவம் எலுமிச்சையை மிகவும் போற்றுகிறது. அதன் மருத்துவக் குணங்களைப் பயன்படுத்திக்கொள்கிறது. எலுமிச்சை பித்தத்தைக் கட்டுப்படுத்தி, வாயைத் சுத்தப்படுத்துகிறது. சளியை வெளியேற்றவும் எலுமிச்சை பயன்படும். கண்களுக்கு நலம் பயக்கும் செரிமானத்திற்கும் மலச்சிக்கலைப் போக்கவும் எலுமிச்சை சாறு குடிக்க வேண்டும். வாந்தியை நிறுத்தும். தொண்டைக் கமறலைப் போக்கும். கீல்வாதம், அமிலத்தால் வயிற்றுக் கோளாறுகள், குடல் புழுத் தொல்லை ஆகியவற்றை எலுமிச்சைச்சாறு போக்கும், மேலும் இது சுவையில் புளிப்பு.

அமிலத்தன்மை உள்ளதாக இருந்தாலும், உடலில் காரத் தன்மையைச் சேர்க்கிறது. அதனால் தான் அமிலச் சுரப்புக் கோளாறுகளைக் குணமாக்க உதவிகிறது. பக்டீரியாக் கிருமிகளை எதிர்க்கும் ஆற்றல் கொண்டது. மலேரியா, கொலரா, டிப்தீரியா, டைபாய்ட் கிருமிகளை எலுமிச்சைச்சாறு அழிக்கிறது என்று மருத்துவ விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள்.

### அடங்கியுள்ள சத்துக்கள்

இதில் சிறிதளவு விற்றமின் ஏயும் உள்ளது. இயற்கையாகக் கிடைக்கும் விற்றமின் சிதான் உடலுக்கு மிகவும் பலன்தரக்கூடியது. செயற்கை விற்றமின் சி மாத்திரைகளால் ஓரளவுக்குத்தான் உடல் பயன்பெறும். எலுமிச்சைச்சாற்றிலுள்ள விற்றமின் சி மிகுந்த சக்தியுடையது. எவ்வாறெனில் இதனுடன் விற்றமின் பயோ.ஃபிளேவனாய்டு கலந்துள்ளதே இதற்குக் காரணம். தயமின், நயசின் சத்துக்களும் எலுமிச்சையில் ஓரளவு உள்ளன.

எலுமிச்சைச் சாற்றை அப்படியே அருந்தக்கூடாது. நீர்விட்டுக் கலந்து அருந்தவேண்டும். அப்படியே நீர் கலக்காமல் எலுமிச்சைச்சாறை அருந்தினால் பற்களின் ஏனாமல் சிதைந்துவிடும். அதிகாலையில் எலுமிச்சைச் சாறுடன் தண்ணீரும், தேனும் கலந்துபருகினால் உடலுக்குள்ளிருக்கும் நச்சுக்கழிவு முழுக்க சுத்திகரிக்கப்படும். இதை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து குடித்தால் மலச்சிக்கல் சரியாகும்.

### மருத்துவப் பயன்கள்

ஃபுளூ காய்ச்சல், மலேரியா, குளிர் காய்ச்சலுக்கு எலுமிச்சைச் சாறு உதவும். ஃபேன் முல்லர் என்கிற நோப்ல் பரிசு பெற்ற விஞ்ஞானி எலுமிச்சைச்சாறு பக்டீரியா எதிர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளதை நிரூபித்துள்ளார். எலுமிச்சையை மழைக்காலங்களில் கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டும். காய்ச்சலின்போது எலுமிச்சைச்சாறு அருந்த நல்ல நிவாரணம் கிடைக்கும். நீரிழிவு நோயாளிகள் அடங்காத தாகத்தைத் தணித்துக்கொள்ள எலுமிச்சைச் சாறு குடிக்கலாம். அடிவயிற்றுக் கோளாறுகளை எலுமிச்சைச் சாறு உடனடியாகக் குணப்படுத்தும் நரம்புகளை வலுப்படுத்தும். இதயத்திற்கும், நாடித்துடிப்புக்கும் சீரான இயக்கத்திற்கும் உதவுகிறது. எலுமிசசைப் பழத்திலுள்ள சி விற்றமின் மிகவும் முக்கியமானது. வஸ்கொடகாமாவின் கடல் பயணத்தின்போது மூன்றில் இரண்டு பங்கு பயணிகள் ஸ்கேவி நோயால் இறந்து போனார்கள். இப்போதிருந்தால் எலுமிச்சம் பழச்சாறு அமிலத்தால் அது தடுக்கப்பட்டிருக்கும். கடற்பயணிகள் பலரும் இப்போது எலுமிச்சம் பழத்தின் பயனை உணர்ந்து பயன்படுத்துகிறார்கள்.

மேலும், எலுமிச்சையிலுள்ள பயோ.ஃபிளேவனாய்டு ரத்தக் குழாய்களைப் பலப்படுத்தி, ரத்தக் கசிவைத் தடுக்கிறது. உயர் ரத்த அழுத்தத்திற்கு நல்ல மருந்தாகவும் எலுமிச்சை இருக்கிறது. மூளையில் ஏற்படும் ரத்தக் கசிவையும் எலுமிச்சை தடுத்துவிடும். எலுமிச்சையிலுள்ள சிட்ரிக் அமிலம் மருத்துவத் தன்மையுடையது.

அப்பிள், திராட்சையைவிட இதில் அதிகமாக பொட்டாசியம் உள்ளது. இது இதயத்திற்கு வலுவூட்டக் கூடியது. பற்கள், எலும்புகளின் நலத்தை எலுமிச்சை காக்கிறது. கீழ்வாதம், மூட்டுவாதம் போன்றவற்றின் சிகிச்சையில் எலுமிச்சையின் பங்கு அதிகம்.

சிறுநீரகப்பை, சிறுநீரகம் இவற்றில் ஏற்படும் தொற்று மற்றும் கற்களின் சிகிச்சைக்கு எலுமிச்சைச் சாறு உதவும். வாந்தியைக் கட்டுப்படுத்தும். காமாலை சிகிச்சைக்கும் உதவும். மலை ஏறுபவர்களுக்கு எலுமிச்சை வரப்பிரசாதம். ஒட்சிசன் பற்றாக்குறையால் மூச்சுத் திணறல் ஏற்படும்போது எலுமிச்சை கைகொடுக்கும். எவரெஸ்ட் சிகரத்தில் கால் வைத்த முதல் மனிதன் எட்மண்ட் ஹிலாரி தனது சிகர வெற்றிக்கு காரணம் எலுமிச்சையும் கூடத்தான் என்று கூறியுள்ளார். □

# றொறன்ரோவில் கண்டனக் கூட்டம்

சர்வதேச ஊடகவியலாளரும், தமிழ்நெற் இணையத்தள பிரதான நிர்வாகியும், இராணுவ மற்றும் உளவுத்துறை ஆய்வாளருமான தராக்கி என்றழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து, றொறனரோவில் பாரிய கண்டனக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கனேடிய தமிழர் பேரவையும், கனேடிய தமிழ் ஊடகவியலாளர் இணையமும் இணைந்து நடாத்திய இக் கண்டனக் கூட்டத்தில், கனேடிய ஊடகங்களைச் சார்ந்த முக்கியஸ்தர்கள், கனேடிய அரசியல் பிரமுகர்கள், சர்வதேச ஊடகவியலாளர்களும் கலந்துகொணடனர். உலகத் தமிழர் பத்திரிகையின் பொறுப்பாளர் கமல், கனேடிய தமிழர் பேரவையின் தொடர்பாளர் துளசி ஆகியோர் வரவேற்புரைகளை நிகழ்த்தினார்கள்.

கன்சவேற்றிவ் கட்சி உறுப்பினரான ஜோன் மீற்றிஸ், லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் குடிவரவு அமைச்சருமான ஜூடிஸிக்றோ, ஒன்டாரியோ என்.டி.பி கட்சியைச் சேர்ந்த பீற்றர் கோமஸ், வீரகேசரி பிரதம ஆசிரியர் தேவராஜா, ஒலிபரப்பாளர் பி.விக்னேஸ்வரன், கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம், கனேடிய தமிழ் வானொலி அறிவிப்பாளர் ரவி, தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசு செய்தியாளர் சற்குணம், முழக்கம் ஆசிரியர் அன்பரசி, மாமனிதர் சிவராமின் நெருங்கிய நண்பர் பாலசிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட பல பிரமுகாகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கலாநிதி குலமோகன், பொன்னையா விவேகானந்தன், சிவா சின்னத்தம்பி ஆகியோர் கவிதைகள் வாசித்தனர். ஸ்காபரோ நகரில் அமைந்துள்ள புனித பீற்றர் அன்ட் போல் மண்டபத்தில், நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இந்த கண்டனக் கூட்டத்தில், ஏராளமான பொதுமக்களும் ஆர்வலர்களும் பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வர்த்தகர்களும் கலந்துகொண்டு தங் [illegible] (து-04)

# மாவின் விலை 1 ரூபாவால் குறைவு பாணின் விலை ரூ.13 என நிர்ணயம்

(கொழும்பு)

மாவின்விலை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

பிறீமாக் கம்பனியின் ஏக போகவுரிமை நீக்கப்பட்டதினால் ஒருகிலோகிராம் கோதுமையின் விலை ரூபா31.50 லிருந்து 23 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

25 ரூபாவுக்கு விற்கப்பட்டு மற்றொரு ரகத்தைசசேர்ந்த கோதுமை மா தற்சமயம் 24 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. பாண் தயாரிப்பதற்கான உயர்தரக் கோதுமைமா ஒரு மூட்டை 1,1[illegible] ரூபாவுக்கு கொள்வனவு செய்[illegible]படுகின்றது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாண்களைத் தயாரித்து விற்கும் திட்டம் இன்னும் இருவார காலத்தில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

450 கிராம் எடையுள்ள பாணின விலை 13அல்லது 14ரூபாவென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விற்பனை நடைமுறையைப் பார்த்து இந்தத் திட்டம் கொழும்புக்கு வெளியே விஸ்தரிக்கப்படும் எனவும் அமைசசர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று - குறள்

# வலம்புரி

## மக்கள் மீதான தாக்குதலை நிறுத்துக

மட்டக்களப்பு சந்திவெளியில் ஜனநாயக ரீதியாக தமது கோரிக்கைகளை நிலைநிறுத்தி அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் படைத்தரப்பினரால் மிலேச்சத்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நாட்டின் அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்துவதுடன், சமாதானத்தை வேரோடு பிடுங்கி எறியும் நடவடிக்கையுமாகும்.

தமது உரிமைகளை ஜனநாயக ரீதியாக அமைதி வழியில் கோரிய மக்கள்மீது பாதுகாப்புப் படையினர் மிகவும் மோசமாகத் தாக்கியமையானது ஜனநாயகத்தை மதிக்கின்ற, அதனைப் பேணுகின்ற, மனித நாகரிகத்தைக் கட்டிக்காக்கின்ற எந்தவொரு சமூகமும், நாடும் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

இதுமிகவும் அநாகரிகமான செயற்பாடாகும். நாகரீக மனித சமூகம் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய விடயம். ஜனநாயக மக்கள் தமது வாழ்வையும், வாழ்வாதார உரிமைகளையும், இருப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புவது இயல்பானது.

தமது வாழ்வியலில், உரிமைகளில், இருப்பின் நெருக்குவாரமும், இடைஞ்சல்களும் ஏற்படும்போது அவர்கள் அதனைக் களைந்து, இயல்புவாழ்வில் ஈடுபடுவதற்காக ஜனநாயக ரீதியான எதிர்ப்பை வெளிப்படுத்துவர். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதும், அனுமதிக்கப்படக்கூடியதுமாகும்.

ஐ.நா. உரிமைப் பிரகடனத்தில்கூட மனிதஉரிமைகளுக்கு ஜனநாயக முதன்மை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் மட்டக்களப்பில் தமது இயல்பு வாழ்க்கைக்கு இடைஞ்சலாக, நெருக்குதலாக அமைந்திருக்கின்ற ஓர்விடயத்தையும் சுட்டிக்காட்டி, அதனை நீக்கக்கோரி ஜனநாயகவழியில்நின்று மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த ஜனநாயகப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் உட்பட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர். இவர்கள் முன்னிலையில் ஜனநாயகத்திற்கு அடி, உதை, துப்பாக்கிச்சூடு என கண்மூடித்தனமான நடவடிக்கையைப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

ஜனநாயகவழியில் உரிமை - நீதி கேட்டவர்களுக்கு ஆயுதவழியால் அநீதி வழங்கப்பட்டிருக்கிறது. இது எத்தகைய அப்பட்டமான கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை. இதனை எந்தவகையில் அரசு நியாயப்படுத்தப்போகிறது. அல்லது இதற்கு நியாயம் கற்பிக்கத்தான் நீதியில், ஜனநாயகத்தில் ஒரு வழியுண்டா?

இத்தகைய நடவடிக்கைகளை உலக மனித உரிமை அமைப்புக்கள், சர்வதேச ஜனநாயக அமைப்புக்கள் வன்மையாகக் கண்டிக்கவேண்டும். அத்துடன் இதுபோன்ற மக்களைக் கொடுமைப்படுத்தும், அவர்களைச் சீண்டும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த முனையவேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒப்புக்காக சம்பவத்தைக் கண்டிக்கலாம். சம்பவம் தொடர்பாக விசாரணைக்குழு அமைக்கலாம். ஆனால் இவையெல்லாம் காலங்காலமாக இடம்பெறும் கோவை நிரப்பலும், கண்துடைப்பும்தான்.


இது வேண்டவேவேண்டாம். இனிமேல் இவ்வாறானதொரு சம்பவம் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் நிகழ்வு இடம்பெறமாட்டாதென்ற சர்வதேச உத்தரவாதமும், சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும், பின்னணியில் நின்றவர்களுக்கும் நீதியின் முன் உரிய தண்டனையும் வழங்கப்படவேண்டும்.

இலங்கைத்தீவில் பொதுமக்கள் மீது அதுவும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனஅழிப்புத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். பாதுகாப்புப் படையினருக்கு ஆயுதம் வழங்கப்பட்டது யாரைப் பாதுகாக்க என்பதை அவர்களுக்கு சரியாகப் போதிக்கவேண்டும்.

தொடர்ந்தும் பொதுமக்களைத் தாக்குவது படையினருக்குப் பலமாகாது. இதுவே நாட்டின் அழிவுக்கும், மக்கள் போராட்டத்திற்கும் வழிகோலும். மக்களின் சக்தித் திரள்வு மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே மக்களைச் சீண்டாதீர்கள். வேதனையை அனுபவிக்கவேண்டிவரும்.

# மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற அரசு தொடர்ந்தும் உறுதியுடன் செயற்படும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கியமை, பொது நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தி நாட்டினை முன்னேற்றவே என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எத்தகைய சிக்கல்கள் இருந்த போதும் மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வரை கூட்டமைப்பு அரசின் ஆட்சி தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.வீதிகள் புனரமைப்புத் தொடர்பான நிகழ்ச்சித்திட்ட வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,நாங்கள் இலங்கையர்கள். நாங்கள் பிரச்சினையினை ஒரு விதமாகப் பார்க்கின்றோம். ஜே.வி.பி அந்தப் பிரச்சினையினை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கலாம். இந்த நாட்டு மக்கள் எமக்கு வாக்களித்தது ஒரு நிகழ்ச்சித் திட்டங்களாக அதாவது இந்த நாட்டினை முன்கொண்டு செல்லவே.

எமக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வாறு வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டு மக்கள் எமக்கு அதிகாரத்தைத்தந்தது கூட்டமைப்பின் நிகழச்சித் திடடத்தை அமுல் படுத்தவே.

இந்த நாட்டு மக்கள் எமக்கு அதிகாரத்தைத் தந்தது நாட்டினை அபிவிருத்தி செய்து, நாட்டினை முன்கொண்டு செல்லவே நாட்டினை பின்னோக்கிக் கொண்டு செல்வதற்காக அல்ல.

எனவே எத்தகைய வேறுபாடுகள் இருந்தாலும் எதிர்காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வரை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும என்பதை உறுதியாகக் கூறவிரும்புகின்றேன் என்றார். (ற-4)

## மீனவர்களுக்கான

# இராணுவத்தின் பாஸ் நடைமுறையை இரத்துச் செய்யுமாறு வேண்டுகோள்

(திருநெல்வேலி)

மனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு இராணுவத்தால் வழங்கப்படும் அடையாள அட்டை நடைமுறையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் மேற்படி சம்மேளனம் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மற்றும் யாழ். கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

கையளிக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரின் விபரம் வருமாறு:-

மீனவர்கள், தங்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரிடமிருந்து அடையாள அட்டைகளைப் பெறுவதில் மிகுந்த சிரமத்தை அனுபவித்தனர்.

இந்த மீனவர்கள் தேசிய அடையாள அட்டைகளுக்கு மேலதிகமாக மீன்பிடித் தொழில் செயவதற்காக கடற்றொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளையும் வைத்திருக்கிறார்கள்.

இந்த இரு அடையாள அட்டைகளும் இருக்கத்தக்கதாக மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் அதிகாரம் கடறபடையினருக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது பிரிவு தேவையில்லை. இந்த முறையானது தவறானதும் தனிமனித சுதந்திரத்தை மீறும் ஒரு செயலுமாகும்.

பத்தாயிரம் மீனவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றியம், 2005.04.27ஆம் திகதி கூடி இந்த நடைமுறையை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் இந்த 3வது நடைமுறையைக் கண்காணிப்புககுழு ஊடாக தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிப்பதெனவும் தீர்மானம எடுத்தது.

மீனவர் சமுதாயம் அடைகின்ற கஷ்டத்தைக் கருத்தில் கொண்டு இவ் அடையாள அட்டை வழங்கும் நடைமுறையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-43)

# வீடுகள் நிர்மாணப் பணிகளுக்கென ரூ.45 கோடி 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை45 கோடியே 35 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிதி உதவி மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

முற்றாகச் சேதமடைந்த வீட்டை மீளக் கட்டுவதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஓரளவு சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த உதவித் திட்டம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மடடகளப்பு, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, களுத்துறை,கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர 29 கோடியே 72 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் திட்டத்தின் கீழ் 937 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை வங்கி தெரிவித்துள்ளது. (ற-4)

## ஊழியர் சேமலாப நிதிக்கான

# கொடுப்பனவை செலுத்தத் தவறியோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கான கொடுப்பனவைச் செலுத்தத் தவறிய வேலைகொள்வோருக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதாவுடசென விரத்ன தொழில் ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதிக எண்ணிக்கையான வேலைகொள்வோர் ஊழியர் சேமலாப நிதிக்கான கொடுப்பனவைச் செலுத்துவதில்லை என்று தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிதத அவர்,

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை கொள்வோர் நிதிக்கான பங்களிப்பைச் செய்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் தொழில ஆணையாளரினால் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் அதாவுடசெனவிரத்ன, இத்தகைய வேலை கொள்வோரிடம் ஊழியர் சேமலாப நிதிக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் நடவடிககைகளை அடுத்த 6 மாத காலததுக்குள் மேற்கொள்ளுமாறு தொழில் ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

அத்துடன் 20 இலட்சம் ஊழியர்களிடமிருந்து மாதாந்தம் 200கோடி ரூபா ஊழியர் சேமலாப நிதிக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்கப் போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இருந்த போதும், நாட்டில் தொழில் புரிவோரின் எண்ணிக்கை 70 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (க-2)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எனக்கு அருகில் இருக்கும் உருவங்களில் மட்டும் நான் இருப்பதாக நினைக்காதே. அந்த உருவங்களின் மூலமாக வெளிப்படுபவன் நானே. அதனால் தான் சொல்லுகிறேன். "நான்" ஞானம் மிகுந்த அமிர்தம் ஆகாயம் போல் சர்வவியாபியாகப் பரந்து தோன்றுகிறேன்.

சுவாமி விவேகானந்தர்

## சிங்கள மீனவர் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

கல்குடாவில் சிங்கள மீனவர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது வலைவாடியில் வைத்தே நேற்று முன்தினம் இரவே கோடரியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.48வயதுடைய ஸ்டீபன் குரே என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார். கைகள், கண்கள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட அவரது சடலத்தை நேற்றுக்காலை கல்குடாப்பொலி ஸார்கண்டெடுத்து வாழைச்சேனை வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். (ச-4)

## இந்திய...

கொண்டுவருவதற்கு இந்தியாவின் ஆலோ சனையையும், ஆதரவையும் பெறுவதற்கா கவே எரிக் சொல்ஹெய்ம் இந்தியா சென் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதி பதி சந்திரிகாகுமாரதுங்க இந்தியாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-4)

# சிவராம் படு கொலையை விசாரிக்க விசாரணைக் குழு அமைக்க வேண்டும்

## எரிக் சொல்ஹெய்முக்கு கடிதம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலை குறித்து சுதந்திர விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எல்லைகள் அற்ற பத்திரிகை ஆணைக்குழு நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் கடிதம்மூலம் கோரியுள்ளது.

பத்திரிகை சுதந்திரத்திற்கு விடுக்கப் படும் அச்சுறுத்தல் தொடர்பாகவும் ஊடக வியலாளர்கள் படுகொலை செய்யப்படு வது தொடர்பாகவும் யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழு எவ்விதமான நடவடிக்கை களையும் மேற்கொள்ளவில்லை.

யுத்தமற்ற நிலைமாத்திரம் அமைதி என்று அர்த்தப்பட்டுவிடாது. சிவில் சமூகத் தின் சுதந்திரமான பணி அவர்களின் இயலுபு நிலை ஆகியவற்றை உறுதிப்படுத்துவ தன் மூலமே நிலையான அமைதியை உருவாக்கமுடியும் என எரிக்சொல்ஹெய் முக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர் படுகொலை தொடர்பில் நாம் கண்டுகொண்ட அனுபவங்களின்படி சிவராம் கொலையா ளிகளை அரசு நீதியின் முன்நிறுத்தும் என்ற நம்பிக்கை எமக்கில்லை. எனவே சுதந்திர விசாரணை ஆணைக்குழுவொன் றை அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.சிவராம் கொலைதொடர்பில் நோர்வே அரசுஇலங்கையின் அமைதி முயற்சிகளின் அனுசரணையாளர் என்ற வகையில் கண்டனம் தெரிவிக்காதமை குறித்து நாம் ஆழ்ந்தகவலை அடைகிறோம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச.4)

## பொதுக்கட்டமைப்பு...

ஆலோசனையைப் பெறுவதற்காகவே ஜனாதிபதியின் இப்பயணம் மேற்கொள்ளப் படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## சுமாத்ராவில் நேற்று பெரும் நில நடுக்கம்

(ஜகார்தா)

இந்தோநேசியாவின் சுமாத்ரா தீவில் நேற்றுக்காலை பயங்கர நிலநடுக்கம் ஏற் பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலின் படி 6.6என பதிவாகிஉள்ளது.

ஜகார்தாவில் இருந்து 400கிலோ மீற்றர் தொலைவில் இந்தியப்பெருங்கடலில் இந்த நிலநடுக்க மையம் கொண்டிருந்தது என வும் இந்த கடலடி நிலநடுக்கத்தால் சுனாமி அலைகள் எதுவும் ஏற்படவில்லை என இந்தோனேசிய வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது. (ச)

## செயலாளர்கள் நியமனம்

அமைச்சுக்கான ஐந்து புதிய செயலாளர் களை ஜனாதிபதி நியமித்துள்ளார். தொழில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப கல்வி அமைச்சின் செயலாளராக திலக் ஹபகிகமவும் சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சின் செயலாளராக டபிள்யூ. கே.கே.குமார சிறியும் உடனடியாக அமு முக்கு வரும்வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தோட்ட வீடமைப்பு உட்கட்ட அமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு ஜாவ தேவனும் துறைமுக விமான போக்குவரத்து அமைச்சுக்கு எ.ஜெ.அத்துருகிரியவும் நிய மிக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி நடவ டிக்கைகளுக்கான அமைச்சின் செயலாள ராக எம்.ஏ.ஆர்.டி.ஜெயதிலக நியமிக்கப் பட்டுள்ளார். (4)

# சித்தாண்டி இராணுவ முகாம் மீது இனந் தெரியாதோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைவீதி சித் தாண்டியில் உள்ள இராணுவக்காவலரண் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப்பிரயோகம் செய் யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இராணுவவீரர் ஒருவர் சிறுகாயம் அடைந்து பொலனறுவை வைத் தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து தேடுதல்மேற்கொண்ட இராணுவத்தினர் வந்தாறுமூலை மகாவித்தி யாலயத்தில் இரவுநேர கடமையில் இருந்த காவலாளி மற்றும் அங்கிருந்த இரண்டு மாணவர்களையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து ஏறாவூர் பொலிசில் ஒப்ப டைத்துள்ளனர்.

இம் மூவரையும் விசாரணையின் பின் விடுவிக்கப்போவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## அரச உத்தியோகத்தர்களுக்கு

# மேலதிக நேரக் கொடுப்பனவு மட்டுப் படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூர் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் சகல தரங்களையும் சேர்ந்த அரச உத்தி யோகத்தர்களினதும் மேலதிக நேரவேலைக் கான கொடுப்பனவுகள்யாவும் மட்டுப்படுத் தப்பட்டிருப்பதாக மாகாண பிரதம செய லாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஜனவரிமாதம் தொடக்கம் அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பதனால் அவர் களுக்கான மேலதிகநேரக் கொடுப்பனவு வீதமும் அதிகரித்துள்ளது.

எனினும் அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவுக்கு மாத்திரமே திறைசேரியி னால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய கொடுப்பனவுக்கான நிதிஒதுக்கீடுகள் அதி கரிக்கப்படவில்லை. இதனால் உத்தியோ கத்தர்களுக்கான மேலதிகநேரவேலைக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள், வேலைக்கொடுப்பனவு என்பனவற்றை மட் டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப் பதாக அவர் தெரிவித்துள்ளார்.

உப நிலை உத்தியோகத்தர்களின் வாராந்த மேலதிக வேலைநேரம் பத்து மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளதோடு மாதாந்தம் 40மணிநேரமாகவும் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

சிற்றூழியருக்கான மாதாந்த மேலதிக நேரவேலை 60மணித்தியாலமாக குறைக் கப்பட்டுள்ளதோடு அரச வாகன சாரதிக ளுக்கான கொடுப்பனவுகளும் மட்டுப்படுத் தப்பட்டுள்ளன.எனினும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் பொருத்தமற்றவை என அவர்மேலும் தெரி வித்தார். (ச-4)

## ஹர்த்தாலால் வட-கிழக்கு...

மீசாலை, புத்தூர்ச்சந்தி ஆகிய இடங் களிலிருந்த இராணுவக் காவலரண்கள் பொதுமக்களால் அழிக்கப்பட்டன. கைதடி யில் உள்ளஇராணுவவீதித்தடை ஆர்ப்பாட் டக்காரர்களினால் தீயிட்டுக்கொளுத்தப்பட் டது. இச்சம்பவங்களினால் இராணுவத்தி னருக்கும் பொதுமக்களுக்குமிடையே அங் காங்கே முறுகல்நிலை ஏற்பட்டது. எனினும் கண்காணிப்புக்குழு தலையிட்டு தீர்த்து வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதிகளில் சிலமணிநேரம் பதற்ற நிலைகாணப்பட்டதுடன் மேலதிக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக் கப்பட்டார்கள். வீதிகளில் அங்காங்கே ரயர் கள் போடப்பட்டு எரிக்கப்பட்டு போக்கு வரத்துத்தடைசெய்யப்பட்டது.

மருதனார்மடம்,சுன்னாகம், சாவகச்சேரி போன்ற இடங்களின் பிரதான வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

**வடமராட்சி**

வடமராட்சியில்வதிரி, மாலி சந்தி, மந்திகை வீதிகளில் மக்கள் ரயர்களை போட்டு எரித்து வீதித்தடைகளை ஏற்ப டுத்தினார்கள். பருத்தித்துறை,கலிகைச் சந்தி இராணுவமுகாம் முன்பாகவும் ரயர் கள் போட்டுஎரிக் கப்பட்டு வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் புலோலி, சாரை யடியில் இராணுவ முகாமிற்கு முன்னால் ரயர்களை போட்டு எரித்து வீதித்தடைகளை ஏற்படுத்திய வேளை அங்குநின்ற இராணு வத்தினர் வீதித்தடைகளை அகற்றும்படி கூறினர்.இதனால் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டவேளை இராணுவத்தினர் அம்முகாமை விட்டு வெளி யேறிச்சென்றனர். நெல்லியடி, மந்திகை மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளிலும் பனங்குற்றிகள் போடப்பட்டும் ரயர்கள் எரிக்கப்பட்டும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் போக்கு வரத்து தடைப்பட்டதால் முகமாலையில் பயணிகள் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. பிற மாவட்டங்களில் இருந்து வந்த பயணிகள் முகமாலையில் நேற்று தவம்கிடந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் நேற்றைய ஹர்த்தால் காரணமாக அன்றாட நடவடிக் கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. தமிழ், முஸ்லிம் பிதேசங்களில் உள்ள பாடசா லைகள், வர்த்தக நிலை யங்கள், வங்கி கள், அரச அலுவலகங்கள் என்பன மூடப் பட்டிருந்தன. தனியார் வாகனங்கள், பஸ் கள் எதுவும் போக்கு வரத்தில் ஈடுபடவில் லை.அம்பாறையின் கரையோரப்பிரதேசங் களில் உள்ளவீதிகளில் விசேடஅதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டி ருந்தனர் இதேவேளை பாடசாலைமாணவர்கள தாக்கப்பட்டமையை கண்டித்து அமைதி எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

**வவுனியா**

நேற்று வவுனியாவில் இருந்து வெளி யிடங்களுக்கோ அல்லது வெளியிடங்களில் இருந்து வவுனியாவுக்கான போக்கு வரத்து எதுவுமே நடைபெற வில்லை. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.அரச காரியாலயங்கள், திணைக்களங்கள், அரச செயலகம் உட்பட அனைத்து அரசசார்பு நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.இதேவேளை திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பூரண ஹர்த் தாலும் கதவடைப்பும் இடம்பெற்றன மட் டக்களப்பில்விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். மன் னாரில் நேற்றும் இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றது இதற்கான ஏற் பாட்டை பொதுஅமைப்புக்கள் மேற்கொண்டு உள்ளன. (ச-4,19,124,101,43,35,74,21)

## சிவராமின்....

பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட் டது. இப்பேரணியில் வன்னிமாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், விநோதரலிங்கம் மற் றும் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பேரணியின் இறுதியில் உரையாற்றிய வன்னி ஊடகவியலாளர் சங்கத்தின் தலை வர் மாணிக்கவாசகம் உரையாற்றினார். ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பாக விசாரணையினை சர்வதேச நிலையிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டு மென அவர் தனது உரையில் கேட்டுக் கொண்டார்.மேலும் சிவராமின் படுகொலை தொடர்பாக இதுவரை எதுவித ஆக்கபூர்வ மான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப் படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உரியமுறையில் சரியான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளி களைக்கண்டறியவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். (ச-19)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

COMPUTER NET WORKING COURSE -5000/=

★ ஒரு பிரிவில் 05 பேர் மட்டுமே;

★ பதிவுகளுக்கு முந்துங்கள்

NORTH EAST TECHNOLOGIES (PVT) LTD

NO.34, SADDANATHAR ROAD NALLUR, JAFFNA

021 - 2223786 & 0777 - 708498 (hot line)













இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.